பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 18 வெள்ளிக்கிழமை 01.04.2022 கதிர் 147

**இனிது ரகசியம் அல்ல!**

மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றோம். அது போல புலிகளின் பிடியிலிருந்து இலங்கையை மீட்ட கோட்டாபய ராஜபக்ஷ என்று புகழ்ந்த பௌத்த, சிங்கள மக்கள் இப்போது அந்த கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து 2

# கோட்டாவின் வீடு முற்றுகை; வெடித்தது மக்கள் போராட்டம்

- படையினரை ஏற்றிவந்த பஸ் தீயிட்டு எரிப்பு
- பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம்
- எஸ்.ரி.எவ். துப்பாக்கி வேட்டு
- ஊடகவியலாளர் உள்ளிட்ட 9 பேர் காயம்
- கொழும்பில் ஊரடங்கு பிரகடனம்








ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நுகேகொடை – மிரிஹான – பெங்கிரிவத்தை இல்ல வீதியை நேற்று மாலை சுற்றி வளைத்த மக்கள் நள்ளிரவைத் தாண்டியும் மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது. 11

## களனியிலும் ஆர்ப்பாட்டம்



களனியிலும் பொருள்களின் விலைவாசிஉயர்வு, தட்டுப்பாடு, மின் வெட்டு போன்றவற்றுக்கு 11

## உங்களுக்கு உல்லாச வாழ்வு; எங்களுக்குப் பட்டினிச் சாவா?

### யாழில் அரசுக்கு எதிராக நாளை மாபெரும் மக்கள் போராட்டம்

அரசுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில்நாளைசனிக்கிழமை மாபெரும் மக்கள் போராட்டம் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதான பஸ் நிலையத்துக்கு 2

## இன்றும் சுழற்சி முறையில் மின்வெட்டு!

நாடளாவிய ரீதியில் இன்றும் சில வலயங்களில் 11 மணித்தியாலங்களும், மேலும் சில வலயங்களில் 13 மணித்தியாலங்களும் மின் விநியோகம் துண்டிக்கப்படவுள்ளது என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

G,H,I,J,K,L அதற்கமைய இன்று 2

## யாழில் இடையில் புகுந்து டீஸல் அடித்த அமைச்சரின் வாகனத்தினால் குழப்பம்!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.01

யழ்ப்பாணத்திற்கு வந்த 11

## சுடுகாட்டுக்கு சென்ற 15 பேரை விரட்டிக் கொட்டிய குளவிகள்!

### செட்டிகுளம், வீரபுரத்தில் சம்பவம்

செட்டிகுளம் வீரபுரம் பகுதியில் குளவிக்கு கொட்டுக்கு இலக்காகி 15 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

செட்டிகுளம், வீரபுரம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட சின்னத்தம்பனை கிராமத்தில் இடம்பெற்ற மரணச் சடங்கு ஒன்றின் 11

## நாடு அதலபாதாளத்தில்; சகல துறைகளும் வீழ்ச்சி

### பல்வேறு நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு



தொலைநோக்கு இல்லாத மற்றும் வினைத்திறன் இல்லாத அரசின் செயற்பாடுகளால் நாடு அதலபாதாளத்தில் வீழ்ந்துள்ளது. அதுவே இன்று சகல 11

## அதிகாரிகளை வீட்டிலிருந்து பணியாற்ற பிரதமர் பணிப்பு



நாட்டில் தற்போதைய நெருக்கடி நிலையின் தொடராக பிரதமர் அலுவலகம் மற்றும் பிரதமரின் ஏனைய அமைச்சுக்களில் உள்ள ஏனைய அதிகாரிகளை வீட்டிலிருந்தே தமது கடமைகளைச் செய்யுமாறு பிரதமர் மஹிந்தராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார். 11

## எரிபொருள் பற்றாக்குறை; தபால் சேவையில் தாமதம்

கொழும்பு, ஏப்ரல் 01

தபால் சேவையில் பெரும் தாமதம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரத் தடைகள் மற்றும் எரிபொருள் பற்றாக்குறை என்பவற்றால் இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது எனத் தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.

## உள்ளக விசாரணையை நாம் கோரவே இல்லை!

### சுமந்திரன் எம்.பி. விளக்கம்



ஜனாதிபதியுடனான சந்திப்பில் நாம் உள்ளக விசாரணையைக் கோரவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் தொடர்பான சட்டமூலத்தின் பிரகாரம் சர்வதேச ஒத்துழைப்பை 11

eDUS Learning made lovable
Online School with GLOBAL STANDARDS
சிறந்த Online கல்விக்கான நிரந்தர தீர்வு..!!
English & Tamil Medium
Enroll Now
அனைத்து பாடங்களுக்குமான ஒன்லைன் வகுப்புகள் எம்மிடமிருந்து.
தரம் 1 - 5 (Primary) தரம் 6 - 11 (Secondary) G.C.E A/L
Admissions
www.edus.lk
0777 123 330
அனைத்து பெற்றோர் மாணவரினதும் நம்பிக்கைக்குரிய ஒன்லைன் கல்விச்சேவை..!

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இலங்கையை மீட்பதற்கான போராட்டத்தை கட்சிகள், தரப்புகள் கடந்து ஆரம்பித்திருக்கின்றனர்.

நேற்று மாலை முதல் மிரிஹானாவில் உள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டுச் சுற்றாடலில் திரளத் தொடங்கியிருக்கும் இளைஞர்கள், யுவதிகள் கூட்டம் அதைத்தான் எடுத்துக் காட்டி நிற்கின்றது. ராஜபக்ஷக்களுக்கு எதிரான மக்கள் எழுச்சி பீறிட்டுக் கிளம்பத் தொடங்கியிருக்கின்றது.

'தடி எடுத்தவன் தடியால் அழிவான்' என்பார்கள். பௌத்த, சிங்களப் பேரினவாத வெறியைக் கிளப்பி, அந்த வெறி எழுச்சியில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய கோட்டாபய ராஜபக்ஷ அதே போன்ற மக்கள் எழுச்சியை – எதிர்புரட்சியை – வெறித்தனமான மக்கள் கோபத்தை – இப்போது எதிர்கொள்ளும் துரதிஷ்ட நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 69 லட்சம் வாக்காளர்களின் வாக்குகள் மூலம் பெற்ற ஆணை நேரத்துடன் காலாவதியாகி விட்டது என்பது கண்கூடு.

ஜனநாயகப் போராட்டத்தின் மூலம் ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற மக்கள் எழுச்சி ஏற்பட்டிருப்பதாகவே தோன்றுகின்றது.

சிவில் நிர்வாக அதிகாரிகளின் இடங்களுக்கு படையினரையும், ஓய்வுபெற்ற படை அதிகாரிகளையும் நியமித்து, நாட்டின் உயர்மட்ட சிவில் நிர்வாகத்துறையை இராணுவ மயப்படுத்தியிருக்கும் – முன்னாள் இராணுவ எதேச்சாதிகாரியான – ஒருவருக்கு எதிராக மக்கள் புரட்சி அல்லது எழுச்சி என்பது விபரீதமான விளைவுகளைத் தரவல்லது.

உணர்ச்சிகளுக்கு இடம் கொடுத்து முடிவெடுக்காமல் – கும்பல் மனப்பாங்கில் (Mob Mentality) தீர்மானங்களை மேற்கொள்ளாமல் – கவனமாகக் கையாள வேண்டிய போராட்டம் இது.

நாளை மறுதினம் நாடு முழுவதிலும் ஒரே சமயத்தில் பல இடங்களிலும் போராட்டங்களுக்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கையில் அதற்கிடையில் இளைஞர், யுவதிகள் தம்வயமாக ஒன்று திரண்டு ஜனாதிபதியின் இல்லத்தை நோக்கி இந்தப் போராட்டத்தை அதிரடியாக நேற்று மாலை ஆரம்பத்திருக்கின்றார்கள்.

ராஜபக்ஷக்களின் குடும்ப ஆட்சிக்கான வீழ்ச்சி, இங்கிருந்துதான் ஆரம்பிக்கப்படுவதாக எனக்குத் தோன்றுகின்றது.

மக்கள் எழுச்சியையும் பதற்றத்தில் குழப்பியடித்து, களேபரங்களை ஆளும் தரப்பு உண்டு பண்ணுமானால், ஆட்சியின் வீழ்ச்சி இன்னும் சில மடங்கு வேகத்தில் சரிவுடன் ஆரம்பிக்கும்.

★ ★ ★

நான் பயணித்த யாழ் – கொழும்பு சொகுசு பஸ் நேற்று அதிகாலை 2 மணியளவில் புத்தளத்துக்கும் சிலாபத்துக்கும் இடையில் மிக மோசமான விபத்தைச் சந்தித்தது.

நான் டிரைவருக்கு நேரடியாக பின் சீற்றில் இருந்தேன்.

அதிகாலை 2.15 மணியிருக்கும். நான் கண்ணை மூடியபடி விழிப்பில் இருந்தேன். சாரதி மிகக் கவனமாக பஸ்ஸை செலுத்தியமையை அவதானித்த படி கண்ணை மூடினேன் திடீரென 'டமார்' எனப் பெரும்சத்தம். பஸ்ஸின் கண்ணாடிகள் நொருங்கி, மழைச் சிதறலாக பயணிகள் மீது பொழிந்தன. எங்கும் களேபரம், குளறல் சத்தம். பஸ் நின்று விட்டது. திடீர் பிரேக் மோதலுடன் நிமிர்ந்து பார்த்தேன். சாரதி பக்கத்துக்கு மறுபக்கத்தில் உள்ள ஜன்னலோரக் கண்ணாடிகள் எவையும் மிஞ்சவில்லை. அவையாவும் துகள்களாக சிதறி பயணிகள் மீது வீசப்பட்டுக் கிடந்தன. தெய்வாதீனமாக யாருக்கும் பெரிய காயங்கள் ஏதுமில்லை.

முதல் ஸீட் என்பதால் விறுவிறுவென இறங்கிப் பார்த்தேன் பஸ் மோதலைச் சந்தித்த இடத்தில் பெரிய மரக்கிளை ஒன்று வீதிக்குக் குறுக்கே விழுந்து கிடக்கின்றது. அதைத் தாண்டி பஸ் வந்து விட்டது.

யாருக்கும் என்ன நடந்தது என்பது தெரியவில்லை. மரக்கிளை முறிந்து பஸ்ஸின் மேல் வீழ்ந்ததால் இந்த அனர்த்தம் நேர்ந்ததா அல்லது பஸ்ஸின் முன்புற மேல் மூலை அந்த மரக்கிளையுடன் போய் மோதி அதை முறித்து வீழ்த்தியதா என்பது புரியவில்லை.

அந்த விடியற்காலை வேளை, அந்த இருட்டில் அது பற்றி விசாரிக்கும் மனநிலை எனக்கு இருக்கவில்லை. அடுத்து வந்த கொழும்பு பஸ்ஸில் ஒரு சீற் இருந்தது. ஏறி கொழும்புக்கு வந்து சேர்ந்து விட்டேன்.

என் ஊடக நண்பன் ஒருவர் காலையில் விடயம் கேள்விப்பட்டு தொலைபேசி அழைப்பு எடுத்தார். தமக்கே உரித்தான ஊடகவியலாளர் பாணியில் என்னை நோண்டினார். அவரின் கேள்விக்கு பதில் கூறக்கூடியளவுக்குவிபத்தின்விவரங்கள் எனக்குத் தெரிந்திருக்கவில்லை. அதை ஒப்புக் கொண்டு விடுவதே மேல் என்று எனக்குப்பட்டது.

"என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியவில்லை. பஸ்ஸின் ஒரு பக்கக் கண்ணாடிகள் யாவும் முற்றாக சிதறி விட்டன. பெரிய மரக்கிளை ஒன்று வீதிக்குக் குறுக்கே விழுந்து கிடந்தது. பஸ் முற்றாகச் சேதமடைந்து விட்டது." – என்றேன் நான்.

"ஓ! அப்படியா? இலங்கை நிலைமைதான் பஸ்ஸுக்கும்" என்றார் அவர்.

எனக்கு விளங்கவில்லை என்ன என்று கேட்டேன்.

"உங்கள் பஸ் மாதிரி இலங்கையின் பொருளாதாரமும் நொருங்கி விட்டது. உங்கள் விபத்து எப்படி நடந்தது என்பது தெரியாதமை போல இலங்கைக்கும் அதன் பொருளாதார நிலைமை இப்படி நசுங்கிப் போனமை ஏன் என்று தெரியவில்லை." – என்றார் என் நண்பர்.

நான் பயணித்து, விபத்தில் சிக்கிய பஸ் எலும்புக் கூடாய்க் காட்சியளித்தது. அந்த பஸ் போலத்தான் இலங்கையின் பொருளாதாரமும் குறுகிப் போய்க் கிடக்கின்றது என்பது உண்மைதான்.

– மின்னல் –

## இன்றும் சுழற்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அதிகாலை 12 மணி முதல் அதிகாலை 3 மணிவரை 3 மணித்தியாலங்களும், காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை 4 மணித்தியாலங்களும் , மாலை 6 மணி முதல் இரவு 10 மணிவரை 4 மணித்தியாலங்களும் என 11 மணித்தியாலங்கள் G,H,I,J,K,L ஆகிய வலயங்களில் மின் விநியோகம் துண்டிக்கப்படவுள்ளது.

### A,B,C,D,E,F

இதேவேளை, இன்று அதிகாலை 3 மணி முதல் காலை 6 மணி வரை 3 மணித்தியாலங்களும், நண்பகல் 12 மணி முதல் மாலை 4 மணி வரை 4 மணித்தியாலங்களும், மாலை 6 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை என 13 மணித்தியாலங்கள் A,B,C,D,E,F வலயங்களில் மின் விநியோகம் துண்டிக்கப்படவுள்ளது.

### T,U,V,W

இன்று அதிகாலை 12 மணி முதல் அதிகாலை 3 மணி வரை 3 மணித்தியாலங்களும், காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை 4 மணித்தியாலங்களும், மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை 6 மணித்தியாலங்களும் என 11 மணித்தியாலங்கள் T,U,V,W வலயங்களில் மின் விநியோகம் துண்டிக்கப்படவுள்ளது.

### P,Q,R,S

இன்று அதிகாலை 3 மணி முதல் காலை 6 மணி வரை 3 மணித்தியாலங்களும், நண்பகல் 12 மணி முதல் மாலை 4 மணி வரை 4 மணித்தியாலங்களும், மாலை 6 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை 6 மணித்தியாலங்களும் என 11 மணித்தியாலங்கள் P,Q,R,S வலயங்களில் மின் விநியோகம் துண்டிக்கப்படவுள்ளது.

### M,N,O,X,Y,Z

இன்று காலை 5.30 முதல் காலை 9 மணி வரையும் , மாலை 4 மணி முதல் மாலை 6 மணிவரையும் 5 மணித்தியாலங்களும்30நிமிடமும்M,N,O,X,Y,Z வலயங்களில் மின் விநியோகம் துண்டிக்கப்படவுள்ளது.

# வவுனியாவில் ஒரே நாளில் இரு ஆண்களின் சடலங்கள்

(வவுனியா நிருபர்)

வவுனியா, ஏப். 01

வவுனியா, தவசிக்குளம் பகுதியில் வீடு ஒன்றில் இருந்து குடும்பஸ்தரின் சடலம் பொலிஸாரால் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரே நாளில் இரு ஆண்களின் சடலங்கள் வவுனியாவில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

தவசிக்குளம் பகுதியில் வசித்து வந்த குடும்பம் ஒன்றில் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக மனைவியும் அவருக்குத் துணையாக பிள்ளையும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சென்றிருந்த நிலையில் குடும்பத் தலைவர் மட்டும் வீட்டில் நின்றுள்ளார்.

மனைவியும் பிள்ளையும் வைத்தியசாலையில் இருந்து வீடு சென்றபோது குறித்த குடும்பஸ்தர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார் என்றுமனைவியால்கிராமஅலுவலருக்கு வழக்கப்பட்ட தகவலையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற கிராம அலுவலர் மற்றும் பொலிஸார் சடலத்தைப் பார்வையிட்டதுடன் பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அப்பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய மருதலிங்கம் நிமல்ராஜ் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இதேவேளை, வவுனியா சிவபுரம் பகுதியில் உள்ள கிறிஸ்தவ ஆலயம் ஒன்றில் இருந்தும் 35 ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (100)

# பஸிலின் சம்பந்தி 'றோ'வின் புள்ளி!

## சர்ச்சையைக் கிளப்புகின்றார் விமல்; லிட்றோ நிறுவனத்தையும் இந்தியாவுக்கு வழங்குவதற்கு அரசு முயற்சி எனவும் குற்றச்சாட்டு



நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் இரு மகள்களில் ஒருவர் இந்தியப் பிரஜையையும், மற்றொருவர் பிரிட்டன் பிரஜையையும் திருமணம் முடித்துள்ளனர். இந்தியாவில் திருமணம் முடித்துள்ள மகளின் மாமனார், 'றோ' உளவு அமைப்பின் பிரதானியாவார்.

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ எம்.பி. தெரிவித்தார்.

இந்நிலையில், லிட்றோ நிறுவனத்தையும் இந்தியாவுக்கு வழங்குவதற்கு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ முயற்சித்து வருகின்றார் என்றும் விமல் எம்.பி. குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் பதவியைப் பறிப்பதால் மாத்திரம், நாட்டை நெருக்கடி நிலைமைகளில் இருந்து மீட்க முடியாது. பஸில் என்கிற பல்லை பிடுங்குவதால் மாத்திரம் வாய் சுத்தமாகாது.

இலங்கை கேட்கும் போதெல்லாம், கடன்களை இலங்கைக்கு வாரி வழங்குவதற்கு இந்தியாவுக்குப் பைத்தியமா? இலங்கையில் நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய தேவைகள் இந்தியாவுக்கு இருக்காதா? அதனடிப்படையில், லிட்றோ நிறுவனத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு அரசு தயாராகி வருகின்றது – என்றார்.

## உங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
முன்பாக காலை 10 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

உங்களுக்கு உல்லாச வாழ்வு; எங்களுக்குப் பட்டினிச் சாவா? மக்களே வாரீர் கோட்டா – மஹிந்த – பஸில் ஆட்சியிடம் நியாயம் கேட்போம் என்ற கோஷத்துடன் இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் வட பிராந்திய செயலணியின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படவுள்ள இந்தப் போராட்டத்துக்கான அழைப்பிதழில், அரிசி, சீனி, மா, பாண், பருப்பு, மல்லி, மிளகாய் என்ன விலை? மண்ணெண்ணெய், டீசல், பெற்றோல், காஸ் இல்லை ஏன்? எங்கள் வரிப்பணம் எங்கே? வரிசைகளில் காத்திருந்து நாம் வாழ்வைத் தொலைப்பது இன்னும் எத்தனை காலத்துக்கு? தட்டிக் கேட்க அணிதிரள்வோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## முட்டாள்கள் தேசம்

**சர்வதேச ரீதியில் அன்னையர் தினம், தந்தையர் தினம், காதலர் தினம், மகளிர் தினம், தொழிலாளர் தினம், வெள்ளைப் பிரம்பு தினம் என்று பல நாள்கள் கொண்டாடப்படுகின்றன.**

**அந்த வரிசையில் இன்று ஏப்ரல் முதலாம் திகதி, ஏப்ரல் முட்டாள்கள் தினம்.**

**தொழிலாளர் தினம் என்றால், நாம் தொழிலாளர்கள் என்று அதற்கு உரிமை கொண்டாட ஒரு தரப்பினர் இருப்பர். வெள்ளைப் பிரம்பு தினம் என்றால் அது எமக்குரிய நாள் என்று அதற்கும் உரிமை கோர பார்வையற்ற ஒரு தரப்பு உள்ளது. அது போலவே அன்னையர் தினம், தந்தையர் தினம், மகளிர் தினம் என்று அவையவற்றுக்கு உரிமை கோருவதற்கு ஒரு தரப்பு இருக்கும்.**

**ஆனால், இன்றைய முட்டாள் தினத்துக்கு நம்மில் யாரும் உரிமை கோரத் தயாரில்லை. உரிமை கோராத வர்களுக்கான தினம் இது எனலாம்.**

**எனினும், இதில் வேடிக்கை என்னவென்றால் இன்றைய தினத்துக்கு யாரும் உரிமை கோராமல் விடினும், நம்மில் பலருக்கு அதுதான் பொருத்தமான தினம் என்பதுதான்.**

**அதுவும் இந்த வருடம் 'முட்டாள்கள் தினம்' இலங்கையர்களுக்கு அதி விசேடமானது. அதற்குக் காரணம் உண்டு.**

**யார் முட்டாள்?**

**தன்னை – தன் தரப்பை – அறியாதவன்தான் மிகப் பெரிய முட்டாள். தன்னையறியாதவன்தான் தனக்கே எதிரி என்கின்றது பகவத் கீதை.**

**தம்மை – தங்களை – அறியாதவர்களாக இருக்கின்றனர் இலங்கை மக்கள்.**

**தாங்கள் ஏமாற்றப்படுகின்றோம் என்பதை, ஏமாற்றப்பட்ட பின்னர் – காலம் தாழ்த்தி – உணரும் துர்ப்பாக்கிய நிலையில் இலங்கை மக்கள் இருக்கின்றமைதான் நமது நாட்டின் பெரும் பின்னடைவு.**

**இந்த நாட்டின் தலையெழுத்தையே மாற்றப் போகின்றோம் என்ற எண்ணத்துடன் – தவறான புரிதலுடன் – நாட்டின் தலைவரைத் தேர்ந்தெடுத்த 69 லட்சம் மக்கள், இன்றைய தினம் தங்களுடையதுதான் என்பதை இன்னும் கூட புரியாமல் இருப்பது வேடிக்கை.**

**'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்பர். அதுபோலவே முட்டாளை முட்டாள்தானே அவரணைப்பான்...?**

**இந்தத் தலைவரை எமது இலங்கை நாட்டு மக்களும் இப்படித்தான் அரவணைத்துத் தேர்ந்தெடுத்துள்ளனர் போலும்.**

**ஆனாலும் தாங்கள் மிக மோசமாக ஏமாற்றப்பட்டுள்ளோம், அதன் மூலம் முட்டாள்களாக்கப்பட்டுள்ளோம் என்பதை இலங்கை மக்கள் இன்னும் சரிவரப் புரிந்து கொள்ள வில்லை என்பதுதான் நாட்டின் பெரும் துரதிஷ்டம்.**

**குட்டக் குட்டக் குனிபவனும் முட்டாள். குனியக் குனியக் குட்டுபவனும் முட்டாள்.'**

**இலங்கை மக்களுக்கும் இந்த ஆட்சித் தலைமைக்கும் என்றே தயார் பண்ணப்பட்ட பழமொழி போல இது கனகச்சிதமாகப் பொருந்துகின்றது.**

**கற்றுக் கொண்ட பாடங்களில் இருந்து, தீர்மானங்களை எடுத்து – பட்டறிவில் இருந்து அனுபவ முடிவுகளை மேற்கொண்டு – தன்னைத் தகவமைத்துக் கொள்ள முடியாத சமூகம் அல்லது நாடு மேம்பட முடியாது.**

**இந்த ஆட்சித் தலைமை பேரினவாதத்தைக் கிளப்பி, மக்கள் வாக்குகளைச் சுருட்டி, ஆட்சி அதிகாரத்துக்கு வந்து, இனவாதத் தீயில் நாட்டை குட்டிச் சுவராக்கித் தீய்த்துக் கொண்டிருக்கின்றது.**

**இந்த ஏமாற்று மோச வேலையைப் புரிந்து கொண்டு, தன்னை நேர்சீர் செய்ய நாடும் மக்களும் தயாராகாத வரை மீட்சி இல்லை என்பதுதான் உண்மை.**

## வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தில் எரிவாயுவை பெற அரச அலுவலர் ஆர்வம்!

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் அரச அலுவலகர்கள் மாகாண கல்வித்திணைக்களத்தில் எரிவாயுவை இலகுவாக பெற்றுக்கொள்ளுவதற்கு மிகவும் ஆர்வம் காட்டுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாளாந்தம் விற்பனையாகும் எரிவாயுவை பெற்றுக் கொள்ளுவதற்கு வாடிக்கையாளர் எரிவாயு நிலைய முகவர்களிடம் நீண்ட வரிசையில் காத்திருத்திருக்கின்றனர்.

அவ்வாறான நிலையைப் பொருட்படுத்தாது யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள செம்மணி வீதியில் உள்ள மாகாண கல்வித்திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தமது கடமையை செயலாற்றி கொண்டு தமது திணைக்களத்தின் முன்பாக எரிவாயுவைப் பெற்றுக்கொள்ளுவதற்காக வெற்று எரிவாயு கொள்கலன்களை அடுக்கி வைத்துள்ளனர்.

இந்நிலை தொடர்பாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனிடம் தொலைபேசியூடாக ஊடகவியாளர் ஒருவர் இது தொடர்பாக வினவியபோது, நுகர்வோர் அதிகார சபையின் அலுவலகர் ஒருவரை அனுப்பிவைக்கின்றோம் என எடுத்துரைத்துள்ளார்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட செயலக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் அலுவலர் அந்த இடத்துக்கு வருகைதந்து அவதானித்தபோது வடமாகாண கல்வித்திணைக்களத்தின் நிர்வாக நிலை அதிகாரியிடம் கலந்துரையாடியுள்ளார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த யாழ். மாவட்ட செயலக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் அலுவலர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் பணிப்புரையில் எரிவாயுவைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய முகவர்கள் ஊடாகத்தான் நடைமுறையுள்ளது.

அதனைத்தான் நடைமுறைப்படுத்தியுள்ளோம். இந்த விடயம் தொடர்பாக எந்தவொரு மாற்றுக்கருத்தும் இருக்க முடியாது மேற்படி திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் இவ்வாறான நிலையில் வெற்று எரிவாயுவை அடுக்கிவைப்பது தொடர்பாக உரிய மாகாண கல்வித் திணைக்கள செயலாளருடன் உரையாடி கூடிய கவனம் செலுத்தப்படும். - என்றார்.

மேலும் இவ்விடயம் தொடர்பாக மாகாண கல்வித்திணைக்கள நலன்புரிக் கழகம் தான் இதற்கான முழுமையான ஒத்துழைப்பினை வழங்கியிருக்கின்றது எனவும் எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

## ஆரம்ப பாடசாலை அமைக்க கிளிநொச்சியில் அங்கீகாரம்



கிளிநொச்சி - உதயநகர் பகுதியில் வாழுகின்ற சிறார்களின் நன்மை கருதி, அந்தப் பிரதேசத்தில் ஆரம்ப பாடசாலை ஒன்றை அமைப்பதற்கு கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதனடிப்படையில், அனைத்து மதங்களையும் சேர்ந்த சுமார் 800 மாணவர்கள் ஆரம்ப கல்வியைக் கற்கக்கூடிய வகையில் 'நாவலர் ஆரம்ப பாடசாலை' உருவாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்பதாக கிளிநொச்சி மாவட்டத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மாவட்டத்தின் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டமையுடன் பல பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் எட்டப்பட்டன.

இந்நிலையில் வடக்கு மாகாணத்துக்குத் தேவையான கோழித் தீவனங்களை உடனடியாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், வடக்கு மாகாணத்துக்குத் தேவையான கோழித் தீவனங்கள் தொடர்பான விவரங்களை உடனடியாகத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்தியக் கடன் திட்டத்தின் ஊடாக அவற்றைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் உறுதியளித்துள்ளார்.

இதனிடையே வடக்கு மாகாணத்திற்குத் தேவையான மேய்ச்சல் தரை தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வை காணும் வகையில், அதிகாரிகளால் அடையாளப்படுத்தப் பட்ட விவரங்கள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனவும் இன்னும் சில மாதங்களில் மேய்ச்சல் தரை தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துவிடுமெனவும் இதன்போது தெரிவித்துள்ளார்.



## வவுனியாவில் உள்ள ஆசிரியர்களுக்கு பாடசாலைகளில் எரிவாயு விநியோகம்

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியர்களுக்கு எரிவாயு விநியோகிக்கப்பட்டுள்ளது.

எரிவாயு பெறுவதற்கு வரிசையில் நின்று ஆசிரியர்கள் சிரமப்படுகிறார்கள் என பாடசாலை அதிபர் ஆ.லோகேஸ்வரன் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக லிற்றோ நிறுவனத்தால் பாடசாலையில் ஆசிரியர்களுக்கு எரிவாயு வழங்கப்பட்டுள்ளது.

எரிவாயு தேவையான ஆசிரியர்களின் விவரங்கள் பாடசாலை அதிபரால் வழங்கப் பட்டு, லிற்றோ எரிவாயு நிறுவனத்திடம் விடப் பட்ட கோரிக்கைக்கு அமைவாக பாடசாலையிலேயே எரிவாயு விநியோகிக்கப்பட்டிருந்தது.

காலைக்கதிர் Kalaikkathir

# சிங்கள தேசமும் சிங்கள மக்களும் எமது தலைவரைத் தேடுகின்றார்கள்!

## ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் கதிர் சுட்டிக்காட்டு

சிங்கள தேசமும் சிங்கள மக்களும் இன்று எமது தலைவரைத் தேடுகின்றார்கள் என்றும், அரசிற்கு முண்டுகொடுக்கும் வேலையை செய்யக்கூடாது என்றும் ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நாட்டின் நிலைமைகள் தொடர்பில் முல்லைத்தீவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் ஏற்பட்டுள்ள மோசமான பொருளாதார நெருக்கடியில் அரசாங்கம் பலவீனம் அடைந்துள்ள நிலையில் சிங்கள மக்களின் எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் தமிழர் தரப்பு தமிழ்த் தேசிய அரசியல் தலைமைத்துவத்துடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

இலங்கையை ஆட்சி செய்த அரசுகள் தொடர்ச்சியாக சிங்கள தனி தேசியவாதத்தை நிலைநிறுத்தி ஆட்சியை நடத்திவந்தார்கள்.

தமிழினம் அடக்குமுறைக்கு உட்பட்ட இனமாக இந்த நாட்டில் வாழ்ந்து வருகின்றார்கள். எமது விடுதலைப்போராட்டம் அதி உச்ச வெற்றியைப் பெற்று தமிழர்களுக்கான தனி தேசத்தை அமைப்பதற்கான வழியில் பயணித்துக்கொண்டிருந்த கால கட்டத்திலும் அரசாங்கங்கள் பேச்சுகள் என்ற விடயத்துக்குள் வந்து பேச்சுகள் மூலம் இனவிடுதலை உணர்வை சிதைப்பதற்கு பல முயற்சிகள் எடுத்தார்கள்.

அந்த முயற்சிகள் நாம் ஆயுத ரீதியாக பலமாக இருந்த காலங்களில் இலங்கை அரசிற்கு வெற்றிகளைக் கொடுக்கவில்லை. அரசியல் ரீதியாக போர் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழர்கள் பலவீனமாக காணப்பட்ட ஒரு சூழலில் இந்த அரசாங்கம் ஆட்சிப் பீடத்தில் ஏறியது.

20 ஆண்டுகள் எம்மை அசைக்க முடியாது என மார்பு தட்டிக்கொண்டு சிங்கள பெரும்தேசியவாதத்தின் வாக்குகளால் வெற்றிபெற்று ஆட்சிப்பீடம் ஏறிய அரசு தற்போது அதே மக்களால் புறக்கணிக்கப்பட்டு மிக மோசமாக பலவீனம் அடைந்த நிலையில், இன்று தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பை பேச்சுக்கு அழைத்துள்ளார்கள்.

இந்தப் பேச்சு என்பது உண்மையில் நாங்கள் மிகவும் இராஜதந்திரரீதியில் சிந்தித்து செயற்பட வேண்டிய பேச்சுத்தான் அமைந்துள்ளது. இலங்கை அரசு மிகவும் நிதானமாக திட்டமிட்டு நகர்கின்றது.

எந்தத் திட்டத்தில் என்ன அடிப்படையில் இந்த பேச்சில் தமிழ் தரப்பு கலந்துகொள்வது என்பது கேள்விக் குறியாகத்தான் இருக்கின்றது.

பன்நாட்டு சமூகத்தின் அழுத்தங்களில் இருந்து மீள்வதற்காகவும் நாட்டில் உள்ள பெரும்பான்மை சமூகமாக இருக்கின்ற சிங்கள மக்களின் எதிர்ப்புக்களில் இருந்து தப்பிக்கொண்டு தொடர்ந்தும் தங்கள் ஆட்சிகளை தக்கவைத்துக்கொள்வதற்காகத் தமிழர்களை ஒருதரப்பாக அங்கீகரிக்கின்றோம் என்ற பொய்யான மாயையை காட்டி அரசாங்கம் பேச்சுக்களில் ஈடுபட்டு தன்னை தப்பிக்கொள்வதற்கு முயற்சி செய்கின்றது என்பதுதான் உண்மையான விடயமாக இருக்கின்றது.

இதில் நாங்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும், ஒவ்வொரு காலகட்டத்திலும் தமிழர்கள் ஒன்றுபட்ட சக்தியாக பலமான ஒரு சக்தியாக கிளர்ந்தெழுந்து தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்காக முற்படுகின்ற காலகட்டத்தில் எல்லாம் பேச்சுகள் என்பது இங்கு நடைபெற்றிருக்கின்றது.

பேச்சுகள் மூலம் காலத்தை இழுத்தடித்து இறுதியில் தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு எதுவும் இல்லாமல் கைவிரிக்கப்பட்ட நிலையில் மக்கள் அடிமைகளாக வாழ்கின்ற சூழல்தான் தொடர்ச்சியாக உருவாக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையை எமது உண்மையான தமிழ் அரசியல் தலைவர்கள் சிந்தித்து செயல்பட வேண்டும். உங்களை மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்ததற்கு மக்களுக்கு நீங்கள் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும் என்பதை கேட்டுக்கொள்கின்றோம்.

இதேபோன்று தமிழர்களின் விடுதலைப் போராட்டம் என்பது 30 ஆண்டு ஆயுதப் போராட்டம் இன்று ஜனநாயக ரீதியான போராட்டம் என்பதை எம்மை எதிரிகளாக பார்த்த சிங்கள தேசம் – சிங்கள மக்கள் இன்று அதற்கான அங்கீகாரத்தை வழங்குகின்ற சூழல் உருவாகிக்கொண்டிருக்கின்றது.

பயங்கரவாதத் தடுப்பு சட்டம் தொடர்பில் நாங்கள் கையெழுத்து போராட்டம் நடத்தியிருந்தோம் அதற்கும் நாடு தழுவிய ஆதரவு எங்களுக்குக் கிடைத்தது.

தியாகதீபம் திலீபனின் சிந்தனை தொடர்பாக தென்னிலங்கையில் இருக்கின்ற அமைச்சர்களுக்கும் மக்களுக்கும் தெளிவுபடுத்துகின்ற நிலை உருவாகி இருக்கின்றது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஊடாக இலங்கை நாட்டின் நிலைமை எவ்வாறு செல்லும் என்று தெளிவாக திலீபன் அன்று கூறியுள்ளார்.

தமிழர்களின் உண்மையான பல விடையங்களை ஏற்றுக்கொண்டு தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கக் கூடிய ஒரு சூழல் சிங்கள மக்களுக்குள் உருவாகியுள்ளது.

சிங்கள ஆட்சியாளர்கள் தொடர்ச்சியாகத் தமிழர்களை சிங்கள மக்களின் எதிரிகளாகச் சித்திரித்து விடுதலை இயக்கத்தைப் பயங்கரவாதிகள் என்று சித்திரித்து எம்மை அடக்குவதற்கு பல முயற்சிகள் எடுத்து அதில் வெற்றிபெற்றார்கள்.

அந்த வெற்றிகளின் ஊடாகத்தான் இன்று ராஜபக்ஷ குடும்பம் ஆட்சி அதிகாரத்தில் ஏறி நிற்கின்றது.

இந்த நிலைமை சற்று மாறுவதற்கான வாய்ப்புக்கள் இங்கு உருவாகியுள்ளன. சிங்கள பெரும் தேசியவாதத்தின் இறுமாப்புடன் ஆட்சிப்பீடம் ஏறியுள்ள அரசாங்கம் இரண்டு ஆண்டுகள் கூட நகரமுடியாத நிலைக்குள் வரலாறு காணாத சம்பவங்கள் – பாரிய எதிர்ப்புக்கள் – இந்த நாட்டில் நிகழ்ந்தேறிக்கொண்டிருக்கின்றன.

இந்த நிலைமையில் எமக்கு சாதகமான பல விடயங்கள் இருக்கின்றன. இதனை எவ்வாறு கையாளப் போகின்றோம். இந்த நிலையில் புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதிகளை நாட்டுக்குக் கொண்டுவந்து நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்காக முயற்சி செய்கின்றார்கள்.

இவ்வாறு புலம்பெயர் தமிழர்கள் நிதிகளைக் கொண்டுவந்து வேலை செய்வதற்கு என்ன உத்தரவாதம்? அதற்கான பாதுகாப்பு என்ன இருக்கின்றது. ஜனாதிபதி அதற்கான பாதுகாப்பு இருக்கு என்று சொல்வார். அதில் உண்மையில்லை. இதேபோல் பல ஜனாதிபதிகள் பல வாக்குறுதிகளைத் தந்துள்ளார்கள்.




இந்தக் காலகட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் மிக நிதானமாகச் செயற்படவேண்டும். எங்கள் மக்களின் அடிப்படை அபிலாஷைகள் தொடர்பிலும் அதிகாரங்கள், மாகாணசபையின் ஆட்சி அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும். அந்த நிலைமைகளை உருவாக்குவதன் பின்னர் தான் புலம்பெயர் நிதிகளை கொண்டுவந்து போட முடியும்.

இதனைவிடுத்து இலங்கை அரசிற்கு முண்டு கொடுக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமை என்பது எங்கள் மக்களுக்கு செய்கின்ற துரோகத்தனமாக அமையும் என்று நாங்கள் கருதுகின்றோம்.

புலம்பெயர் நாடுகளில் வாழும் எங்கள் மக்களும் மிகத் தெளிவாக ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். இலங்கையில் உங்கள் முதலீடுகளைக் கொண்டுவந்து போடுவதற்கு எந்தவிதமான பாதுகாப்பு உத்தரவாதங்களும் இல்லை.

இங்கு இருக்கின்ற கிராமசேவையாளர், பிரதேச செயலாளர், மாவட்ட செயலாளர் யாருக்கும் சுயமாக செயற்படக்கூடிய அதிகாரம் இல்லை. எல்லாம் மத்திய அரசின் கைகளிலும் இராணுவத்தின் கைகளிலும் இருக்கின்றன.

எங்கள் அதிகாரங்களை நாங்கள் பெற்றுக்கொள்ளும் வரைக்கும் புலம்பெயர் தமிழர்கள் முதலீடுகளை மேற்கொள்வது நல்லதல்ல என்பதை விநயமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

நாங்கள் அரசாங்கத்திடம் இருந்து என்னத்தைப் பெற்றுக்கொள்ளப் போகின்றோம் என்பதுதான் முக்கியமான விடயம். அதனைவிட்டு நாங்கள் அரசிற்கு முண்டு கொடுக்கும் வேலையைச் செய்யக்கூடாது. – என்றும் தெரிவித்துள்ளார்.

# மக்களுக்கு நன்மை அளிக்கும் திட்டங்களுக்கு மட்டும் அனுமதி

## டக்ளஸ் தேவானந்தா திடசங்கற்பம்

மக்களின் வாழ்க்கை முறைமைக்கும் வாழ்வாதாரத்துக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்தாத நன்மைகளை வழங்கக் கூடிய திட்டங்களுக்கு மாத்திரமே அனுமதியளிக்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், பூநகரி பகுதியில் இலங்கை நிலைபெறு சக்தி அதிகார சபையால் திட்டமிடப்பட்டு வருகின்ற 'பூநகரி காற்று சூரிய சக்தி பூங்கா' செயற்றிட்டத்திற்கு அனுமதி வழங்குவது தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், காற்றாலைகளை அமைப்பதால் மீன் உற்பத்தி பாதிக்கப்படுவதாக மக்கள் மத்தியில் அச்சம் வெளியிடப்படுவதால், மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகள் உட்பட சம்பந்தப்பட்ட அனைத்து ஆய்வறிக்கைகளும் கிடைத்த பின்னர், இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே கிளிநொச்சி மாவட்டத்தில் இருக்கின்ற காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் எவையும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுபகிர்ந்தளிக்கக் கூடாது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், கிளிநொச்சி மாவட்டத்தில் மாத்திரம் காணிகளற்ற சுமார் 1,800 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இருக்கின்ற நிலையில், வெளியாருக்குக் காணிகள் வழங்க முடியாது எனவும் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பிராந்திய அதிகாரிகளுக்குத் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஐஸ் போதையுடன் இருவர் கைதாகினர்

கிரான்பாஸ் பகுதியில் வைத்து ஐஸ் போதைப் பொருளுடன் இருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மற்றும் வவுனியா பகுதியைச் சேர்ந்த 41 மற்றும் 43 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்களிடம் இருந்து 5 கோடி ரூபா பெறுமதியான 4.9 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# பங்குச்சந்தை நடவடிக்கைகள் மின் தடையால் பெரிதும் பாதிப்பு

நாளாந்த வர்த்தக காலத்தை 2 மணிநேரமாக மட்டுப்படுத்த கொழும்பு பங்குச் சந்தை தீர்மானித்துள்ளது.

அதன்படி இன்று காலை 10.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை மாத்திரம் பங்குச் சந்தை நாளாந்த வர்த்தகத்திற்காக திறந்திருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடளாவிய ரீதியில் நிலவும் மின்வெட்டு காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# மக்கள் 5 ஆம் திகதி வரை பொறுமைகாக்கவேண்டும்

## அமைச்சர் திலும் அமுனுகம உருக்கம்

அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதில் பொது மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்க் கொண்டுள்ளார்கள் என்பதை அரசாங்கம் மறுக்கவில்லை. எரிபொருள் வரிசையில் காத்திருக்கும் மக்கள் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி வரை பொறுமை காக்க வேண்டும் என போக்குவரத்து துறை அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

டொலர்நெருக்கடிதீவிரமடைந்ததைத் தொடர்ந்து எரிபொருள் மற்றும் எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்த காரணத்தால் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதில் பொது மக்கள் பாரிய நெருக்கடியை எதிர்க்கொண்டுள்ளார்கள் என்பதை அரசாங்கம் ஒருபோதும் மறுக்கவில்லை.

எரிபொருள் வரிசையில் காத்திருக்கும் மக்கள் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை பொறுமை காக்க வேண்டும்.

இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெறும் எரிபொருள் எதிர்வரும் 4 ஆம் திகதி அல்லது 5ஆம் திகதி கிடைக்கப்பெறுவதைத் தொடர்ந்து எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொள்ள முடியும்.

எரிவாயு சிலிண்டர் விநியோக பிரச்சினைக்கு இன்னும் ஓரிரு நாள்களில் தீர்வு பெற்றுக்கொள்ள முடியும் என உரிய நிறுவனத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலைக்கு அரசியல் நிலைப்பாட்டில் இருந்துகொண்டு ஒருபோதும் தீர்வு காண முடியாது. நடைமுறை யதார்த்த நிலைமையைப் பொதுமக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

எரிபொருளின் விலையேற்றத்தைத் தொடர்ந்து ரயில் கட்டணத்தையும் திருத்தியமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ரயில் சேவையின் 3 ஆம் வகுப்பு ஆரம்ப கட்டணத்தை 2 ரூபாவால் அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ரயில் பயணிகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் கட்டணம் திருத்தியமைக்கப்படும்.

தனியார் மற்றும் அரச பஸ் போக்குவரத்து சேவைக்கும் தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்வதிலும் சிக்கல் நிலைமை காணப்படுகிறது.

சுற்றுலாத்துறை, சுகாதார சேவை மற்றும் அதனுடன் ஒன்றிணைந்த சேவைகள், கப்பல் சேவைத்துறைக்கு எரிபொருள் விநியோகத்தில் முன்னுரிமை வழங்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாகத் தேசிய போக்குவரத்து சேவை எவ்விதத்திலும் பாதிக்கப்படாது.நெருக்கடியான சூழ்நிலைமை இயலுமான அளவு முகாமைத்துவம் செய்து வருகிறோம். – என்றார்.



## மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த பிரேமலால் ஜயசேகர எம்.பி. விடுதலை

மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர (சொக்கா மல்லி) உள்ளிட்ட மூவரைக் குற்றமற்றவர்களாகக் கருதி விடுதலை செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2015ஆம் ஆண்டில் இரத்தினபுரியில் இடம்பெற்ற கூட்ட மொன்றின்போது, துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட மூவருக்கு இரத்தினபுரி மேல் நீதிமன்றதத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்ப்பு தொடர்பில் பிரதிவாதிகள் சார்பில் பிரதி மேன்முறையீடு செய்யப்பட்டிருந்த நிலையில், அது தொடர்பான தீர்ப்பை நேற்று அறிவித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் பிரதிவாதிகளான நாடாளுமன்ற உறுப்பினர் பிரே மலால் ஜயசேகர உள்ளிட்ட மூவரை நிரபராதிகளாகக் கருதி விடுவிக்குமாறு உத்தரவிட்டது.

இதற்கமைய, நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர, சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் நிலந்த மற்றும் கஹவத்தை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் வஜித தர்ஷன ஆகியோர் இவ்வாறு விடுக்கப்பட்டுள்ளனர்.

# பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கும் நாட்டை மீட்க அனைத்து கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்!



## கரு ஜயசூரிய அழைப்பு

நாடு பொருளாதார மற்றும் சமூகரீதியாக விழுந்துள்ள பாதாளத்திலிருந்து மீண்டு நாட்டு மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு நாட்டிலுள்ள அனைத்து முன்னணி அரசியல் சக்திகளும் பொது இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும் என சமூகநீதிக்கான தேசிய அமைப்பின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்படுள்ளவை வருமாறு –

இன்று அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. நாட்டைபின்னடையச் செய்துள்ளனர். அதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

அதற்கு இந்த நாட்டில் உள்ள அனைத்து அரசியல் சக்திகளும் ஒருமித்த இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும். ஒவ்வொரு அரசியல் கட்சியும் தனித்தனியாக அரசியல் செய்வது எமக்குப் பிரச்சினை அல்ல.

ஆனால் நாடு விழுந்துள்ள இந்த படுகுழியிலிருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமானால் அனைத்து அரசியல் கட்சிகளும் தலைவர்களும் ஒருமித்த பொது உடன்பாட்டுடன் செயற்பட வேண்டும்.

இன்று நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி தீர்க்க முடியாத பிரச்சினையல்ல.

ஒரு கட்டத்தில் இந்தியாவும் இதே போன்ற நெருக்கடியை சந்தித்தது. ஆனால், இந்தியா அதை மிகத் துல்லியமான கூட்டு முயற்சியால் தீர்த்து வைத்தது.

நாம் அனைவரும் அத்தகைய அணுகுமுறையை எடுக்க வேண்டும். அதே சமயம் நாடாளுமன்றம் முக்கியப் பங்கு வகிக்க வேண்டும். எனவே, இந்த நாட்டில் உள்ள அனைத்து அரசியல் சக்திகளும் தனிமனித அதிகாரத்தை இல்லாதொழித்து மீண்டும் நாடாளுமன்ற மரபுக்குத் திரும்ப வேண்டும்.

அதற்குப் பொதுவான ஒருமித்த கருத்துடன் தெளிவான வேலைத்திட்டத்தை நோக்கி நகர வேண்டும். எந்த அதிகார நோக்கமும் இல்லாமல், மிகுந்த நேர்மையுடன் அதற்காக நாங்கள் நிற்கிறோம்.

அத்துடன் நாட்டுக்குள் ஏற்பட்டிருக்கும் அரசியல் சமூக, பொருளாதாரப் பிரச்சினைக்கு 20 ஆவது திருத்தச் சட்டமும் காரணமாகும். அதனால், துரிதமாக நாடாளுமன்றத்துக்கு பூரண அதிகாரம் வழங்க வேண்டும். 20 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்து செய்வதன் மூலம் பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணலாம். – என்றார்.

# தந்தை செல்வாவின் 124 ஆவது ஜனன தினம் யாழில் அனுஷ்டிப்பு!








இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் எஸ்.ஜெ.வி.செல்வநாயகத்தின் (தந்தை செல்வா) 124 ஆவது ஜனன தினம் நேற்று (வியாழக்கிழமை) யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவிடத்தில், தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து, நினைவுத் தூபிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. தந்தை செல்வா அறக்கட்டளை நிலையத்தின் தலை வரும் தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயருமான சுப்பிரமணியம் ஜெபநேசன் தலைமை யில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.சுகிர்தன் உள்ளிட் டவர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாடிக் கறக்கிற மாட்டை...

கடந்த வாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரச தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி இருப்பதை பிற தமிழ் அரசியல் தலைமைகள் விமர்சித்திருக்கிறார்கள். அது எதிர்பார்க்கப்பட வேண்டிய ஒன்றே. ஆனால், 'இனப்போர் அழிவுகளுக்கு பிந்தைய காலப்பகுதியில் அரசியல் தீர்வுக்கான மாற்று வழிகள் வேறு ஏதேனும் இருக்கிறதா?' என்ற கேள்வி எழுப்பினால், அதற்கு ஸ்ரீகாந்தா போன்ற அனுபவம் வாய்ந்த தலைவர்களாலும் பதிலளிக்க முடியாது என்பதே உண்மை. இதுவே, பேச்சுவார்த்தையைப் புறக்கணித்த கூட்டமைப்பு அங்கத்துவக் கட்சியான ரெலோவின் செல்வம் அடைக்கலநாதனின் தலைமைக்கும் பொருந்தும்.



பேச்சுவார்த்தை என்றாலே, அது முதல் சுற்றிலேயே எந்த நல்ல முடிவையும் அளித்துவிடாது. கடந்தகால அனுபவங்களை வைத்து, இதனைத் தமிழர் பகுதிகளில் பிறந்த குழந்தை கூட அறியும். அவ்வாறே தெரிவிக்கும். அதிலும் குறிப்பாக, துப்பாக்கி முனையில் பேச்சுவார்த்தைகளால் முடிவு காணமுடியாத விடுதலைப்புலிகளின் காலகட்டத்திற்கு பின்னர் நிலைமை மிகவும் துர்பலமே. அல்லது, அவ்வாறு எண்ணி, தமிழர் தரப்பு பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதில் எந்தவித பயனும் இருக்கப்போவதில்லை. இதனை கூட்டமைப்பின் 'மெஜாரிட்டி' பிரிவினராவது புரிந்து வைத்திருப்பது வரவேற்கத்தக்க விடயம்.

அவ்வாறு இல்லாமல், 'வைத்தால் குடுமி, சிரைத்தால் மொட்டை' என்ற ஒரு நிலைப்பாட்டை, விடுதலைப் புலிகள் இயக்கம் எடுத்ததினால் மட்டுமே, இனப்பிரச்சினை அவர்கள் விட்டுச்சென்ற ஒரு குறைபாடாக இன்னமும் உலா வருகிறது. அதுவே, இனப்போருக்குப் பிந்தைய காலகட்டத்தில், கூட்டமைப்பு அன்றைய மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் முறிவதற்கும் காரணமாயிற்று.

இன்னும் சொல்லப்போனால், விடுதலைப் புலிகள் இயக்கமாகட்டும், அல்லது போருக்குப் பிந்தைய காலத்தில் கூட்டமைப்பின் தலைமையாகட்டும், இரு சாரருமே, அரசு அவர்களது சில கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட பின்னர், புதிய கோரிக்கைளை முன் வைப்பதை ஒரு கலையாகவே வளர்த்து வந்திருந்தனர். அதாவது, இருவரது பட்டியலும் என்றுமே முடிவுறாத ஒன்றாகவே இருந்தது.

அவ்வாறுதான், போருக்கு பிந்தைய பேச்சு வார்த்தைகளில், அரசியல் தீர்வு குறித்த சில - பல முடிவுகளை எட்டும் தறுவாயில், கூட்டமைப்பு, புலம்பெயர்ந்தோர் கொடுத்த அழுத்தத்தினாலும், அமெரிக்கா போன்ற மேலை நாடுகளின் ஆசை வார்த்தைகளினாலும், போர்க் குற்றங்கள் மற்றும் பொறுப்பு கூறுதல் தொடர்பாக புதிய கோரிக்கைகளை முன் வைத்தது. இதனை, முந்தைய விடுதலைப்புலிகளின் தந்திரோபாய வழியாக அன்றைய அரச தலைமை கண்டது. அதனாலும், போர் குற்றங்கள் குறித்த முடிந்த முடிவான சிந்தனைகளும் மஹிந்த தலைமைக்கு இருந்ததாலும், பேச்சுவார்த்தைகளை அப்போதே, அங்கேயே முறித்துக் கொண்டது.

### இதனால், யாருக்கு நஷ்டம்? நல்லெண்ண வெளிப்பாடு

தற்போதைய பேச்சுவார்த்தைகளில், முக்கியமாக நான்கு விடயங்களை முன்னெடுத்துச் செல்ல இரு தரப்பினரும் முடிவு செய்துள்ளனர். அது குறித்து முடிந்த முடிவுகள் எவையும் எட்டப்படுவதற்கு காலம் வேண்டும். அந்த நான்கு விடயங்களில், அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும், நீதி அமைச்சர் அலிசப்ரியும் கலந்துரையாடி, சட்டபூர்வமான, ஆக்கபூர்வமான பரிந்துரைகளை ஜனாதிபதியின் முடிவிற்கு வைப்பார்கள், என்று இரு தரப்பினரும் ஒத்துக் கொண்டுள்ளனர்.

## அக்கரை அலசல்



**என்.சத்தியமூர்த்தி**

இது போன்றே, இராணுவத்தின் கையில் உள்ள தமிழர் காணிகளை விடுவிப்பதற்கும், சுமந்திரன், இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவுடன் கலந்துரையாடி, ஜனாதிபதியின் முடிவுக்கு தங்கள் பரிந்துரைகளை அளிப்பார்கள். இதில் குறிப்பிடத்தக்க ஒரு விடயம் உள்ளது. தமிழர் தரப்பினை முன்னிறுத்தி, ஜெனரல் சில்வா தங்கள் நாடுகளுக்கு வருவதற்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது. அதேசமயம், அவருடன் தமிழர் தரப்பு பேச்சுவார்த்தை நடத்த முன்வரும் போது, அது கூட்டமைப்பின் நல்லெண்ணத்தையே வெளிப்படுத்துகிறது எனலாம்.

கூட்டமைப்பின் இந்த நிலைப்பாட்டை, சிங்கள அரசியல் தலைமைகள், சிங்கள மக்கள் மற்றும் பௌத்த மதத் தலைமைகளிடம் கொண்டு செல்ல வேண்டிய கடப்பாடும், சுமந்திரன் போன்ற மும்மொழி ஆற்றல் உள்ள தமிழ்த் தலைவர்களுக்கு உண்டு. அது, நேரடி பேச்சுவார்த்தைகளாக இருக்கலாம். சிங்களம் மற்றும் ஆங்கில ஊடக பிரசுரங்கள் மற்றும் பேட்டிகள் மூலம் தெளிவு படுத்தலாம்.

இதற்கு, தமிழர் ஆதரவு சிங்கள அரசியல் தலைமைகளின் உதவியைக் கேட்டு பெறலாம். ஆனால், எங்கே, அரசுடனான கூட்டமைப்பின் பேச்சுவார்த்தைகள் வெற்றிபெற்று விடுமோ, என்று கவலைப்படும் சிங்கள கட்சி தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களின் கருத்தையும் உதவியையும் கேட்டால், அவர்களது நிலைப்பாடு, அவர்களின் உண்மையான எண்ணவோட்டத்தை வெளிப்படுத்தி விடும் என்றே தோன்றுகிறது.

### அரசியல் தீர்வு

பத்திரிகை செய்திகளின் படி, தமிழர்களுக்கு முக்கியமானது என்று கருதப்படும் அரசியல் தீர்வு இரு தரப்பினரும் புதிய அரசமைப்பு நகல் தயாரானதும் அதன் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்துவதாக முடிவு செய்துள்ளனர். இதற்கு, அரசு இரண்டு மாத கால அவகாசம் கேட்டுள்ளது. அதுவே, மற்றுமுள்ள நான்கு விடயங்கள் குறித்த அரசின் அடுத்த கட்ட முடிவுகள் குறித்து கூட்டமைப்பிற்கு ஒருவித தெளிவு பிறக்கும்.

இதில் கவனிக்கப்பட வேண்டிய விடயம் ஒன்று உண்டு. இந்தியா ஆதரவுடனான பதின்மூன்றாவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும் என்று கூட்டமைப்பினருக்கும் பிற தமிழர் தரப்புகளுக்கும் அழுத்தம் கொடுத்தவர் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன். ஆனால் இது குறித்து அரசுடன் பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்த போது, அந்த பேச்சுவார்த்தைகளை புறக்கணித்தார். பின்னர், கொழும்பில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெயசங்கருடன் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்திய போது, அதில் பங்குபெற்றார்.

இது வரவேற்கப்பட வேண்டிய விடயம் என்றாலும், இடைப்பட்ட முரண்பாட்டின் அர்த்தத்தை, கூட்டமைப்பு, அரச தலைமை, ஏன், இந்தியா கூட புரிந்து கொள்ள முடியவில்லை. காரணம், தற்போதைய பேச்சுவார்த்தையை தொடர்ந்து, புதிய அரசமைப்பு குறித்து, அரசு கூட்டமைப்போடு தனியாக பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருந்தால், ரெலோவின் நிலைப்பாடு எதுவாக இருக்க முடியும்?

இந்தியாவைப் பொறுத்த வரையில், பதின்மூன்றாவது திருத்தம், ராஜீவ் காந்தி - ஜெயவர்த்தன ஒப்பந்தத்தின் அடிப்படையிலானது. அது குறித்து மட்டுமே, இந்தியா இலங்கை அரசிற்கு ஏதாவது விதத்திலான அரசியல் அழுத்தம் கொடுக்க முடியும். அதற்கு அப்பால் சென்று, பதின்மூன்றுக்கும் மேலதிகமான எந்தவொரு தமிழர் கோரிக்கைகள் குறித்தும், இந்தியா அதே வகையிலான அழுத்தத்தைக் கொடுக்க முடியாது.

அதேசமயம், பதின்மூன்றுக்கு அப்பால் சென்று தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்குவது குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதாக அப்போதைய மஹிந்த ராஜபக்ஷ அரசு, இந்தியாவிற்கு அளித்த உறுதி மொழி அவ்வளவே. அது இப்போது செல்லுபடியாகது. அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

ஒன்று - மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் முடிவுறு முன்னரே, கூட்டமைப்பு தலைமை அமெரிக்காவின் பின்னால் சென்று, ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலில் போர் குற்றங்கள் குறித்து தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்தது. இன்னமும் சொல்லப்போனால், அந்தத் தீர்மானத்தைக் கோரிப் பெற்றது.

இரண்டாவது - மஹிந்த அரசிற்கு பின்னர் பதவியேற்ற மைத்திரி - ரணில் கூட்டு தலைமையிடமிருந்து அதே தீர்வுகளை பெற்றுக் கொள்ளப் போவதாக கூட்டமைப்பு அறிவித்து, 2015 தேர்தலில் மைத்திரிக்கு ஆதரவு அளித்தது. ஆனால், அவர்களது ஆட்சி, சுமார் ஐந்து ஆண்டுகள் பதவியில் இருந்தும் அது குறித்த அறிவிப்புகள் மட்டுமே வந்த வண்ணம் இருந்தன. எந்த வித முடிவு எட்டப்படவும் இல்லை. அது குறித்து அரச தலைமை எந்த அக்கறையும் காட்டவில்லை.

### மீண்டும் பிழை விடுவோம்?

இன்றைய சூழலில், கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழர் தரப்பு எதுவாயினும், நாட்டின் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல், தங்களுக்கு வேண்டிய அரசியல் மற்றும் பொருளாதார தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியாது. அதேசமயம், எடுத்தோம், கவிழ்த்தோம் என்ற நிலைப்பாடும் சரியானதல்ல. சர்வதேசம் தனது சுய காரணங்களுக்காக வேண்டுமானால், கேட்க வேண்டிய கேள்விகளை தமிழர் தரப்பிடம் கேட்காமலே இருந்திருக்கலாம். நட்பு நாடான இந்தியாவும், தான் அவதானித்த அறிந்த உண்மைகளின் காரணமாகவும், அரசிற்கு மேலதிக அழுத்தம் கொடுக்காமல் இருந்திருக்கலாம்.

(09ஆம் பக்கம் பார்க்க)

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

## செவ்வழி நயனம்

# சிலப்பதிகாரத்தில் இசைத்தமிழ் இசைக்கருவிகள்

- ஏ.ரஜிதா -
(கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.)



பண்டைத் தமிழர் வாழ்வியலில் இசைக்கருவிகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன என்பதை சிலப்பதிகாரத்தினூடாக அறியக்கூடியதாக உள்ளது. அந்த வகையில் சிலம்பில் யாழ், புல்லாங்குழல், மத்தளம், முரசு, பறை, முழவு, சங்கு, கொம்பு போன்றன முக்கியத்துவம் பெற்றுள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது.

### யாழ்

தமிழர் இசைக்கருவிகளில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ள யாழைப் பற்றிக் கூற விளைந்த சிலம்பு, யாழினை மகரயாழ், செங்கோட்டுயாழ், சகோடயாழ், பேரியாழ் என வகைப்படுத்துவதுடன் யாழை எவ்விதம் கையாள வேண்டும் என்பதை வேனிற்காதையில் மாதவி வலக்கையை மடித்து இடக்கையின் நான்கு விரல்களையும் யாழின் மாடகத்தின் மீது பொருத்தி வாசிப்பின் போது குறைகள் வரக்கூடாது என்பதற்காக குறைகள் நீங்கிய பதினான்கு வகை கோவைகள் உடைய சகோட யாழினை வாசித்தாள்.

**'வலக்கை பதாகை கோட்டோடு சேர்த்தி
இடக்கை நால் விரல் மாடகம் தழீஇ'(27-28)**

என்பதனூடாக இதனை அறிந்து கொள்ளலாம்.

### புல்லாங்குழல்

சிலம்பில் கொன்றைக்குழல், ஆம்பல்குழல், முல்லைக்குழல் என புல்லாங்குழல் மூவகைப்படும் என்பதனை ஆய்ச்சியார் குரவையில் கண்ணன் ஊதும் குழல் பற்றி கூறுகையில் காணலாம் இதைவிட சிலம்பிற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் 'கொன்றை, ஆம்பல், முல்லை என்பன கருவி' என்றார். 'முல்லைக் கொடியால் முப்புரியாக தெற்றிய வகை வாய் கட்டறிந்து ஊதலின் குழலாயிற்றெனவும் கொள்க' என்றார். தொடர்ந்து சிலம்புக்கு உரை கண்டவர்கள் குழலை வங்கியம் எனவும், குழல் எனவும் கூறுகின்றனர். மூங்கில் குழல் இனத்தினைச் சேர்ந்ததால் புல்லாங்குழல் என்பர். இதனை வேனிற்காதையில்

**'புறக்காழனவே புல்லென மொழிப'(33)**

என இளங்கோ அடிகள் கூறியுள்ளார்.

### முரசு

தோற்கருவி இனத்தினைச் சார்ந்த முரசானது தமிழ் மன்னர்களால் போர் அறிவிக்கவும் மக்களுக்கு முக்கியமான விடயங்களை தெரியப்படுத்தவும் பயன்பட்டது. சிலப்பதிகாரத்திற்கு உரைகண்ட அடியார்க்கு நல்லார் வீரமுழவு, நிசானம், துருவம், திமிலை என கூறியுள்ளார். சிலம்பில் மங்கல வாழ்த்துப் பாடலில் கண்ணகி கோவலன் திருமணம்



நிச்சயிக்கப்பட்ட வேளையில் முரசு வாசிக்கப்பட்டது.

**'முரசு இயம்பின முருகு அதிர்ந்தன.....'(46)**

### முழவு

தோற்கருவி வகையைச் சார்ந்த முழவு ஏழு வகைப்படும் என அடியார்க்கு நல்லார் கூறியுள்ளார். அவை யாவன அகமுழவு, புறமுழவு, அகப்புறமுழவு, புறப் புறமுழவு, பண்ணமைமுழவு, நாண்முழவு, கலை முழவு ஆகும். முழவானது துணங்கை கூத்திற்கு பயன்படும்.

### பறை

தமிழர் வாழ்வியலில் பறை பிரிக்க முடியாத இடத்தினைப் பெற்றிருக்கக் காணலாம். பறையை அடித்து வெள்ளம் அடிக்கும் மரபு காணப்பட்டது. பறையினை வன்மைக்கருவி என்றும், கடைக்கருவி என்றும், புறப்புற முழவு என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. தொண்டகபறை, சிறுபறை பற்றி சிலம்பில்

**'தொண்டகபறை தொடுமின் சிறுபறை தொடுமின்'(10)**

(09ஆம் பக்கம் பார்க்க)

# அன்பினால் உலகு செய்வோம்

* அன்பினால் உலகு செய்ய நாம் செய்ய வேண்டியது ஒன்றுதான்.

* அன்பு செய்வதை முதலில் நாங்கள் வாழும் இல்லத்திலிருந்து ஆரம்பிக்கவேண்டும்.

* அன்பின் இருப்பிடமாக எமது இல்லத்தை மாற்றவேண்டும்.

* அன்பு எல்லோரையும் மகிழ்ச்சியாக வைத்திருக்கும்.

* அன்பானவர்களே! அத்தகைய அன்பினாலே நாம் அனைவரும் இந்த உலகை ஆளலாம்.

* எப்படி நாங்கள் வீட்டில் அன்பு செய்வது என்று நீங்கள் சிந்திக்கலாம்.

* உங்கள் பெற்றோரின் உழைப்பு, கவனம், சிரத்தை என எல்லாமே எங்களுக்கானவையே என்பதை முதலிற் புரிந்துகொள்ளவேண்டும்.

* பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிவாக இருப்போம்.

* பெற்றோர்களுக்கு ஒத்தாசையாக இருப்போம்.

* எம் பெற்றோர் மகிழ்வோடு இருக்க நாம் முதலிற் செய்ய வேண்டியது அதுதான்.

* சகோதர சகோதரிகளுக்குப் பரஸ்பரம் ஆதரவோடும் அவர்களுடன் புரிந்துணர்வோடும் நடந்துகொள்வோம்.

* இதனால் வீட்டில் அன்பு தானாகவே நிலைத்து நிற்கும்.

* அன்பால் சாதிப்பதற்கு நாம் இந்த வயதிலேயே கற்றுக்கொள்ளவேண்டும்.

* அன்பு நிலைக்க விட்டுக்கொடுப்பு நிச்சயம் அவசியம்.

* விட்டுக்கொடுக்க நாம் தயாராக வேண்டும் என்றால் அதற்கு நாம் எமது பிடிவாதத்தைக் கைவிட வேண்டும்.

* இத்தனையும் வீட்டில் உள்ளவர்கள் செய்துவிட்டால் அன்பின் இருப்பிடமாக இல்லம் மாறிவிடும்.

* பெற்றோரைப் போற்றி வணங்குங்கள்.

* அவர்களின் அன்பிற்குப் பாத்திரமாகுங்கள்.

* தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும் என்பார்கள்.

* வீட்டில் ஆரம்பித்த அன்புதான் எம்மைப் பாடசாலை வரை அழைத்துச் செல்லும்.

* பாடசாலையையும் அன்பு நிறைந்த இடமாக மாற்றுவோம்.

* நல்ல மாணவனாக இருந்து ஆசிரியர்களை மகிழ்விப்போம்.

* நல்ல நண்பனாக இருந்து நண்பர்களை மகிழ்விப்போம்.


* அன்பினால் அனைவரையும் அரவணைப்போம்.

* அன்பானவர்களே! அன்பினால் நாம் இருக்கும் இடத்தை மகிழ்ச்சி நிறைந்த இடமாக மாற்றி அன்பினால் உலகு செய்வோம்.

- குணரட்ணம் சுதாகரன் -
(அபிவிருத்தி உத்தியோகத்தர்,
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்,
நாவலர் மணி மண்டபம், நல்லூர்)

வாரம் ஓர் ஆசனம்

# மகராசனம் (முதலை ஆசனம்)



**செய்முறை**

படி 1. குப்புறப்படுத்து இரு கைகளையும் தலைக்கு மேல் நேராக நீட்டவும். உள்ளங்கைகள் தரையைத் தொட்டபடி இருக்க வேண்டும். இரு கால்களும் இணைந்திருக்க வேண்டும். தலை முதல் கால் வரை நேர் கோட்டில் இருக்க வேண்டும்.

படி 2. கால்களை ஒரு மீற்றர் இடைவெளி விட்டு இரு குதிக்கால்கள் ஒன்றையொன்று நோக்கியவாறு நன்கு அகட்டி வைக்கவும்.

படி 3. வலக்கையை மடக்கி உள்ளங்கையை இடது தோளின் மீது வைக்கவும். அதேபோல் இடக்கையை மடக்கி உள்ளங்கையை வலது தோள் மீது வைக்கவும். முகவாயை இரு கைகள் சேரும் இடத்தில் வைத்து ஆழமாக சுவாசித்தவாறு ஓய்வு எடுக்கவும். எவ்வளவு நேரமானாலும் செய்யலாம் - உச்ச நிலை.

படி 4. பின்னர் இடது, வலது உள்ளங்கைகளை விலக்கியும் பின் இரு கைகளையும் தலைக்கு மேல் நீட்டி இரு கால்களையும் ஒடுக்கி ஆரம்ப நிலைக்கு வரவும்.

**பலன்கள்:-** சாந்தியாசனத்தின் அதேயளவு பயனைப் பெறலாம். தலைவலி, தலைசுற்று, நித்திரையின்மை, உயர் இரத்த அழுத்தம் முதலியவற்றை நீக்கி உடலுக்கும் மனதிற்கும் இருதயத்திற்கும் நல்ல (ஓய்வை) அமைதியைத் தருகிறது. கல்வி கற்கும் மாணவர்கள் இவ்வாசனத்தைச் செய்தால் தொடர்ந்து படிக்கும் போது ஏற்படும் மூளைக்களைப்பை நீக்கி தொடர்ந்து நீண்டநேரம் படிக்கலாம். சுவாச, சமிபாட்டு கோளாறுகள் நீங்கும்.

- ஸ்ரீ. நதிபரன் - (யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)

# இந்திய அரசு வழங்கிய உணவுப் பொதிகள் கடற்தொழிலாளர்களுக்கு கிடைக்கவில்லை!

## அவர்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 01

யாழில் இந்திய அரசாங்கத்தால் கடற்தொழிலாளர்களுக்கென வழங்கப்பட்ட உணவுப் பொதிகள் உரிய வகையில் பகிர்ந்தளிக்கப்படாமையால் கடற்தொழிலாளர்களுக்கு அவை சரிவரக் கிடைக்கவில்லை என மீனவர் சங்கத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தினரிடம் இந்திய உணவுப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டமை தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் இந்திய அரசால் யாழ்.மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்களுக்கென தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான 600 உலர் உணவு பொதிகள் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரின் பங்குபற்றுதலுடன் யாழ்.மாவட்ட செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டன.

எனினும் இந்திய அரசால் வழங்கப்பட்ட உணவுப் பொதிகள் கடற்தொழிலாளர் சமூகத்தினருக்கு கிடைக்கவில்லை. அந்த உதவிகள் கடற்தொழிலாளர் அல்லாதோர் பலருக்குக் கிடைத்துள்ளன என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பல கடற்தொழிலாளர்கள் சங்கங்களில் இந்த விடயம் தொடர்பில் குழப்ப நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் செயற்படும் அரசியல் கட்சி பிரதிநிதிகளுக்கும், கட்சி அங்கத்தவர்களுக்கும், கட்சி ஆதரவாளர்களுக்குமே இந்திய அரசின் உலர் உணவுப் பொதி வழங்கப்பட்டன என தாங்கள் கேள்விப்பட்டனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அரசுக்கு சார்பாக செயற்படும் ஓர் அரசியல் கட்சியின் அலுவலகத்தில் வைத்து யாழ்.இந்திய துணைத்தூதுவரின் பங்கேற்புடன் கட்சி ஆதரவாளர்களுக்கு இந்திய அரசின் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டமைக்கு தங்களிடம் ஆதாரங்கள் உள்ளன எனவும் இதன்போது அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், சீன அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உணவுப் பொதி கடற்தொழிலாளர் சங்க சமாசத்தினரால் உரிய முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டு சகல கடற்தொழிலாளர் குடும்பங்களுக்கும் அந்த உதவிகள் சென்றடைந்தன.

எனினும் அண்மையில் இந்திய அரசால் வழங்கப்பட்ட உணவுப் பொதி தொடர்பில் மீனவர் சங்க சமாசங்களோடு கலந்துரையாடாது தனிப்பட்ட ரீதியில் தன்னிச்சையாக பெயர் விவரங்கள் சேகரிக்கப்பட்டு கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தின் ஊடாக அவை வழங்கப்பட்டன என தெரிவிக்கப்பட்ட போதிலும் கடற்தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு அந்த உதவிகள் கிடைக்கவில்லை என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டில் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் எரிபொருள் பாவனை 30 - 35 வீதம் அதிகரிப்பு!

இலங்கையில் எரிபொருள் பாவனை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 30 - 35 சதவீதம் அதிகரித்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்

2021 ஜனவரிக்குள் ஒரு லட்சத்து 39 ஆயிரம் மெற்றிக்தொன் எரிபொருள் மட்டுமே பயன்படுத்தப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், 2022 ஜனவரியில் எரிபொருளின் பயன்பாடு ஒரு லட்சத்து 98 ஆயிரம் மெற்றிக் தொன்னாக அதிகரித்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வழக்கத்துக்கு மாறான பாவனையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளன எனத் தெரிவித்த சுமித் விஜேசிங்க, அவ்வாறு அதிகரிப்பதற்கான காரணத்தை ஆராய வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக வாகனங்களை இறக்குமதி செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமையையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நாட்டில் எரிபொருள்களுக்கு தட்டுப்பாடு பொதுப் போக்குவரத்துக்கும் இடையூறு!

எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையால் பொதுப் போக்குவரத்து சேவைக்கும் பாரிய இடையூறு ஏற்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக 25 வீதமான தனியார் பஸ்கள் மாத்திரமே போக்குவரத்தில் ஈடுபடுகின்றன எனவும் குறிப்பிடப்படுகின்றது.

இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

# பாடிக் கறக்கிற...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடயம் இவ்வளவு தான்:- கடந்த 2013 - 18 கால பகுதியில், வடக்கு மாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழர் அரசு இயந்திரம் இருந்து. கூட்டமைப்பு சாதித்து என்ன? சம காலத்தில் மிக உயர்வாக கருதப்பட்ட நீதியரசர் விக்னேஸ்வரன் முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், அந்த அரச தலைமை, தங்கள் மக்களுக்கு என்னென்ன நன்மைகள் செய்தார்கள்? நாட்டில் உள்ள பிற எட்டு மாகாண சபை மற்றும் மாகாண அமைச்சரவையை வடக்கு மாகாண சபையும் அரசும் எந்த விதத்தில் உயர்வானவர்கள்?

சரி, இனப்போர் முடிந்த கடந்த 13 ஆண்டுகளில், பல்வேறு தமிழர் அரசியல் தலைமைகள் தங்களது அடுத்த தலைமுறையினரை அடையாளம் காட்டினார்களா? இல்லையென்று சொல்லாமல், கூட்டமைப்பினுள், அதிலும் குறிப்பாக தமிழரசு கட்சியினுள் சுமந்திரன், சாணக்கியன், வைத்தியர் சத்தியலிங்கம் போன்ற ஒரு சிலரே அடுத்த தலைமுறை தலைவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். தங்களது மக்களால் தேர்தல்களில் முன்னிலை படுத்தப்பட்டுள்ளனர்.

ஆனால், அரசு தங்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று ஆதங்கப்படும் தமிழ்த் தலைமைகள், தாங்கள் தங்களது மக்களுக்காக என்ன செய்தோம், என்று சுய பரிசோதனை செய்து கொள்ளவில்லை. அவ்வாறு செய்திருப்பார்களேயானால், அவர்களில் ஒரு சிலராவது, வெட்கி, தலை குனிந்து, அரசியலை விட்டு, துறவறம் பூண்டிருப்பார்கள்.

இந்தப் பின்னணியில், அரசுடனான பேச்சுவார்த்தையின் வெற்றி - தோல்வியை நிர்ணயிக்கும் நிலைமையில் தமிழர் தரப்பில் யாரும் இல்லை. அந்த அதிகாரத்தை யாருக்கும் தமிழ் மக்கள் வழங்கிவிடவும் இல்லை. இந்த பின்னணியில், கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தால், அதற்காக 'மீண்டும் பிழை விட்டோம்' என்ற பழைய பல்லவியை பாட வேண்டிய சூழ்நிலை தோன்றலாம்.

ஆனால், ஆயுதப் போரும் இல்லை, பேச்சுவார்த்தையும் இல்லை என்ற நிலைமை உருவானால், அதன் காரணமாகவே, இரண்டொரு தலைமுறைகளுக்குப் பின்னர், இலங்கை வாழ் தமிழர்களின் வாரிசுகள் காணாமல் போய் விடுவார்கள். அதாவது, தங்களது தமிழ் அடையாங்கள் அனைத்தையுமே தொலைத்திருப்பார்கள். அதற்கு பேச்சுவார்த்தைகளும் அவற்றின் தோல்விகளும் கூட எவ்வளவோ மேல். என்ன, பழமொழி ஒன்று கூறுவார்களே, அது போல் 'ஆடி கறக்க வேண்டிய மாட்டை ஆடித் தான் கறக்கோணும், பாடி கறக்க வேண்டிய மாட்டைப் பாடித் தான் கறக்கோணும்.'

# சிலப்பதிகாரத்தில் .....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து கடல் கோள் காதையில் சேரமன்னன் போரின் போது நன்கு பதனிட்ட தோலாலான போர்ப் பறை ஒலித்தது.

**'வடித்தோல் கொடும்பறை......'(193)**

எனவும் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### மத்தளம்

தோற்கருவி வகையைச் சார்ந்த மத்தளம் குறித்து சிலப்பதிகாரம் அரங்கேற்ற காதையில் மாதவியின் ஆசிரியன் பற்றி கூறுகின்ற இடத்து ஆட்டம், பாட்டு, இன்னிசை, தமிழ்ப்பண், சுரவரிசை, நிறை, பண்ணடைவு, திசைச்சொல், அனைத்திலும் வல்லவன் மத்தளவித்தகன் எனவும் மத்தள இசையோடு குழல் வாசிப்பான் என கூறுகின்றார்.

### சங்கு, கொம்பு

பண்டைத்தமிழர் இசைமரபில் இவையும் குறிப்பிடத்தக்க இடத்தினை பெற்றுள்ளது என்பதனை சிலப்பதிகாரத்தில் மனை அறம்படுத்த காதையில் கண்ணகி, கோவலன் திருமண நிச்சயத்தின் போது இசைக்கப்பட்ட கருவிகளில் சங்கும் ஒன்றாகும்

**'........................பணிலம் வெண்குடை'(46)**

தொடர்ந்து சிலப்பதிகார கால மன்னர்களினால் போர்களின் போதும் சங்கு இசைக்கப்பட்டதென்பதை கடல்கோள் காதையில் போரின் போது சங்குகள் ஒலித்தன எனவும் கொம்பு ஊதபட்டதாகவும்

**'.............................வால்வளை நெடுவயிர்'(195)**

என கூறியுள்ளமை குறிப்பிடதக்கதாகும்.

### பல்லியம்

பல இசைக்கருவிகளை சமசந்தர்பத்தில் ஒலிக்க விடுவதாகும். இந்த வழக்கம் சிலம்பில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அரங்கேற்ற காதையில் மாதவியின் நடனத்தின் போதும் மன்னன் வீதிவலம் வருகின்ற இடத்தும் பல்லியம் இசைக்கப்பட்டது.

**'வாரம் இரண்டும் வரிசையில் பாட**
**பாடிய வாரத்து ஈற்றில் நின்று இசைக்கும்**
**கூடிய குயிலுவக் கருவிகள் எல்லாம்'(135 - 139)**
**'முரசு எழுந்து இயம்ப பல்லியம் ஆர்ப்ப'(125)**

என சிலம்பில் கூறப்பட்டுள்ளது.

### ஐந்திணைப்பண்

தமிழக வரலாற்றில் குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் எனும் ஐவகை நிலங்களும் குறிப்பிடதக்கன. இவை ஒவ்வொன்றும் தமக்கென தனித்துவமான அக, புற ஒழுக்கங்களை கொண்டு விளங்கின. அவ்வாறே இவற்றிற்கு தனித்துவமான இசையும் வழக்கில் காணப்பட்டுள்ளது. இதனை சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளார். அந்தி மாலை சிறப்பு செய் காதையில் கணவனை நினைத்துக் கொண்டிருக்கும் பெண்கள் புல்லாங்



குழலில் முல்லைப்பண்ணை மீட்டினர்.

**'குழல் வளர் முல்லையில் கோவலர்.....'(15)**

அடுத்து இந்திர விழா ஊர் எடுத்த காதையில் கோவலனை பிரிந்த மாதவி பிரிவுத்துயரில் நெய்தல் நில இரங்கல் பண் பாடுகின்றாள்.

**'பிரிந்தார் பரிந்து உரைத்த பேர் அருளின் நிழல்**
**இருந்து ஏங்கி வாழ்வார் உயிர்ப்புறந்தார்'(49)**

தொடர்ந்து சிலம்பில் நீர்ப்படைக்காதையில் வடக்கே பல களங்கள் வென்று வெற்றி வாகைசூடி சேரமன்னன் வரும்வழியில் குறிஞ்சி நில பெண்கள் குறிஞ்சிப் பண்ணை மீட்டுகின்றனர்.

**'குறத்தியர் பாடிய குறிஞ்சிப்பாணியும்'(224)**

மருத நிலத்தில் ஏர்ப்பாடல் பாடும் உழவர்கள் சேர மன்னனின் புகழ் பாடுகின்றனர்;.

**'தொடுப்பு ஏர் உழவர் ஓதைப்பாணியும்'(230)**

இடைக்குலத்தவர் பசுக்கூட்டத்தை நீராட்டிக் கொண்டு பாடும் முல்லைப்பாட்டும்

**'கோவலர் ஊதும் குழலின் பாணியும்'(240)**

என இளங்கோ அடிகள் கூறியுள்ளார்.

### நாட்டார் இசை வடிவங்கள்

சிலப்பதிகாரத்தில் கிராமிய இசைவடிவங்கள் குறித்தும் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அந்த வகையில் இவ் உலகை ஆண்ட மன்னர்களைப் போற்றி பாடுவதற்காக கிராமிய இசைவடிவங்களான அம்மானை, ஊஞ்சல் ஆகியவற்றினை பயன்படுத்தியுள்ளமையினை வாழ்த்துகாதையில்,

**'தூங்குஎயில்மூன்று எறிந்த சோழன் காண் அம்மானை'(16)**
**'கொடுவில் பொறிபாடி ஆடோமோ ஊசல்'(24)**

காணக் கூடியதாக உள்ளது.

மேற்கூறிய வகையில் சிலப்பதிகாரம் தமிழிசையினை அதன் வளர்ச்சி நிலையினை ஏனையோருக்கு முன்னோடியாக இருந்த தன்மையை எடுத்துக் கூறி தமிழர் இசைப்பண்பாட்டினை இவ் உலகிற்கு வெளிப்படுத்திய பெருமை இளங்கோ அடிகளையே சாரும்.

காலைக்கதிர் Kalaikkathir



# உக்ரைனின் மரியுபோல் நகரில் மீண்டும் தற்காலிக போர் நிறுத்தம்

## மக்கள் உடனடியாக வெளியேறும்படி வேண்டுகோள்

உக்ரைனின் மரியுபோல் நகரில் மீண்டும் தற்காலிக போர் நிறுத்தத்தை ரஷ்யா அறிவித்துள்ளது. நேட்டோ அமைப்பில் இணையும் திட்டத்தை கைவிட வலியுறுத்தி உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் போர் 36வது நாளாக தொடர்கிறது. உக்ரைன் முக்கிய நகரங்களை சர்வ நாசமாக்கி வருகிறது ரஷ்ய ராணுவம். தலைநகர் கீவ், கார்கிவ், செர்னிவ், லிலிவ், மரியுபோல், கெர்சன் உள்ளிட்ட கிழக்கு மற்றும் மேற்கு உக்ரைனில் உள்ள முக்கிய நகரங்களில் ரஷ்ய ராணுவம் தரைவழி, வான்வழி தாக்குதல் மூலம் உயரமான கட்டடங்களை எல்லாம் தரைமட்டாமாக்கி உள்ளது. இதில் உக்ரைன் தரப்பில் ஆயிரம் பேர் மரணம் அடைந்துள்ளனர்.

தலைநகர் கீவ்வை அடுத்த இர்பின் என்ற புறநகரில் மட்டும் 200 பேர் இறந்துவிட்டன என கூறப்படுகிறது. ரஷ்ய தரப்பில் 7 மூத்த ராணுவ தளபதிகள் உட்பட 14,000க்கும் மேற்பட்ட ராணுவ வீரர்கள் இறந்துவிட்டனர் என்றும் உக்ரைன் கூறி வருகிறது. இந்த நிலையில் தான் மரியுபோல் நகரில் மீண்டும் தற்காலிக போர் நிறுத்தத்தை ரஷ்யா அறிவித்துள்ளது. இதனால் அங்குள்ள மக்கள் உடனடியாக எல்லைப்பகுதிகளுக்கு வெளியேறும் படி ரஷ்யா கேட்டுக் கொண்டுள்ளது. செர்னோபில் அணுஉலை வளாகத்தில் இருந்து தங்கள் துருப்புகளை ரஷ்யா வெளியேற்றி விட்டதாக அமெரிக்காவின் ராணுவ தலைமையகமான பென்டகன் கூறியுள்ளது. இதனிடையே உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியுடன் அமெரிக்க அதிபர் ஜோபிடன் தொலைபேசியில் பேசினார். உக்ரை னுக்கு ஏற்கனவே 2 முறை 100 கோடி டொலர் அளவிற்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், கூடுதல் ஆயுதங்களை அமெரிக்கா வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மறுபுறத்தில் உக்ரைன் மீதான தாக்குதலை முற்றாக நிறுத்த ரஷ்யாவை பொருளாதார தடைகளால் இன்னும் கடுமையாக நிறுத்த வேண்டும் என்று இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் கூறியுள்ளார்.

# உலக மக்களில் 200 கோடி பேர் போர்ச் சூழலில் வாழ்கின்றனர்

## ஐ.நா. பொதுச்செயலாளர் ஆன்டனியோ குட்டரஸ் வேதனை



உலக மக்கள் தொகையில் 200 கோடி பேர் அதாவது நான்கில் ஒருவர் போர் உள்ளிட்ட மோதல்கள் நடைபெறும் பகுதியில் வசிக்கிறார் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்திருக்கிறது.

ஐநா கூட்டம் ஒன்றில் பேசிய அதன் பொதுச்செயலாளர் ஆன்டனியோ குட்டரஸ், 2ஆம் உலகப்போருக்கு பின் மோதல் நிறைந்த சூழலில் அதிகளவிலானமக்கள் வசிக்கும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார். உக்ரைன், ஏமன், சிரியா, மியான் மர், சூடான், ஹெய்தி உள்ளிட்ட பல நாடுகளில் நில வும் போர் சூழலை சுட்டிக் காட்டி ஐ.நா. பொதுச் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார். போர் சூழல் காரணமாக கடந்தாண்டில் மட்டும் 8 கோடியே 40 லட்சம் பேர் அகதிகளான அவலம் நடந்துள்ளதாக குட்டரஸ் கூறினார்.

இது தவிர இந்தாண்டு உக்ரைன் போரால் 40 லட்சம் பேர் அகதிகளாக வெளிநாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளதாகவும், 65 லட்சம் பேர் உள்நாட்டு அகதிகளாக மாறியுள்ளதாகவும் ஐநா பொதுச்செயலாளர் குறிப்பிட்டார். இந்த ஆண்டு மட்டும் சுமார் 27 கோடி பேர், போர் சூழலால் பாதிக்கப்பட்டு மனிதாபிமான உதவி தேவைப்படுபவர்களாக இருப்பர் என்றும் இது கடந்தாண்டை விட 17 சதவிகிதம் அதிகம் என்றும் அவர் கூறினார். உலகெங்கும் போர், வன்முறை போன்ற மோதல்கள் மேலும் அதிகரிப்பதற்கான சூழலே தற்போது நிலவுகின்றது எனவும் ஐ.நா. பொதுச் செயலாளர் கவலை தெரிவித்தார். எனவே இதற்கான காரணங்களை கண்டறிந்து சரி செய்வது அவசியம் என்றும் ஆன்டனியோ குட்டரஸ் தெரிவித்தார்.



# படைகளை விலக்குகிறது ரஷ்யா பகுதிகளை மீட்கிறது உக்ரைன்

உக்ரைனில்பரவலாக ரஷ்ய படைகள் விலக்கிக் கொள்ளப்பட்டு வரும் நிலையில், கீவ் மற்றும் கார்கிவ் நகரங்களின் புறநகர்ப் பகுதிகளை உக்ரைன் ராணுவம் மீட்டு வருகிறது. நேட்டோ அமைப்பில் இணைய எதிர்ப்பு தெரிவித்து கடந்த மாதம் 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. ஒரு மாதத்திற்கு மேல்நீடித்த தாக்குதல்களில் ஏராளமானோர் உயிரிழந்தனர். இதனிடையே சர்வதேச நிர்பந்தங்களுக்குப் பணிந்த ரஷ்யா, மரியபோல் நகரத்தில் போர் நிறுத்தம் செய்துள்ளது. சென்னோப்பில் அணு உலையை ஆக்கிரமித்திருந்த ரஷ்ய படைகளும் விலக்கிக்கொள்ளப்பட்டன.

இதனால் உக்ரைனில் குண்டுசப்தங்கள் குறைந்திருக்கும் நிலையில், ரஷ்ய படைகள் விலக்கிக் கொள்ளப்படவில்லை என்றும் இடமாற்றம் மட்டுமே செய்யப்படும் எனவும் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கூறியிருக்கிறார். இதனிடையே கீவ், கார்க்கிவ் ஆகிய நகரங்களில் ரஷ்ய படைகள் கைப்பற்றிய பகுதிகளை உக்ரைன் ராணுவம் மீட்டு வருகிறது. ரஷ்ய தாக்குதலுக்குள்ளான பகுதிகளில் உக்ரைன் ராணுவம் அடையாள அணிவகுப்பு நடத்தி வருகிறது. போரில் உயிரிழந்து நகரெங்கும் சிதறி கிடக்கும் ரஷ்யா - உக்ரைன் வீரர்களின் உடல்களை அவர்கள் அகற்றி வருகின்றனர்.

மரியபோலில் ரஷ்ய படைகள் போர் நிறுத்தம் செய்திருக்கும் நிலையில், அங்குள்ள ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு வருகின்றனர். ரஷ்யா - உக்ரைன் இடையேயான பேச்சு முன்னேற்றம் கண்டிருக்கும் சூழலில், இரு நாடுகள் இடையே வரும் முதலாம் திகதி மீண்டும் பேச்சு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.



# பாகிஸ்தான் அரசியலில் உச்சக் கட்ட பரபரப்பு! பிரதமர் இம்ரான் கான் உயிருக்கு ஆபத்து?

## தெஹ்ரீக்- இ- இன்சாப் கட்சி தலைவர்கள் புகார்

பாகிஸ்தானில் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் போர்க்கொடி உயர்த்தியுள்ள நிலையில், அவரது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது என தெஹ்ரீக் - இ- இன்சாப் கட்சி கூறியுள்ளது. இஸ்லா மாபாத்தில் பேசிய பாகிஸ்தான் தெஹ்ரீக் - இ- இன்சாப் கட்சியின் மூத்த தலைவர் பைசல் வாக்டா, பிரதமர் இம்ரான்கானை கொல்ல சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளது என குற்றம்சாட்டியுள்ளார். இதனால் பொதுக்கூட்டங்களில் பேசும்போது குண்டு துளைக்காத பாதுகாப்பு அரணை ஏற்படுத்துமாறு இம்ரான் கானை கேட்டுகொள்ளதாக வாக்டா கூறினார். ஆனால் இறைவன் நிர்ணயித்த நேரத்தில் இந்த உலகை விட்டு வெளியேறுவேன் என்று இம்ரான்கான் கூறிவிட்டார் என பைசல் வாக்டா தெரிவித்துள்ளார்.

இதனிடையே பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் பிரதமர் இம்ரான்கான் அரசு மீது எதிர்க்கட்சிகள் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணை மீது இன்று விவாதம் நடைபெறுகிறது. தீர்மானத்தின் மீது வரும் 3ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இம்ரான் கானுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றுதிரண்டுள்ளமையால் அவரது அரசுக்கு பெரும்பான்மை பலம் குறைந்துவிட்டது. இருப்பினும் நம்பிக்கை வாக்கெடுப்புக்கு முன்னதாக பிரதமர் இம்ரான்கான் ராஜினாமா செய்ய மாட்டார் என மூத்த அமைச்சர்கள் தெரிவித் துள்ளனர்.

# பூமியில் சண்டை..விண்வெளியில் நட்பு

## ரஷ்ய விண்கலம் மூலம் பூமி வந்தடைந்து அமெரிக்க விண்வெளி வீரர் சாதனை

சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் 355 நாட்கள் தங்கியிருந்து பணியாற்றி சாதனை படைத்த நாசா விஞ்ஞானி பூமிக்குத் திரும்பினார். நாசா விண்வெளி வீரர் மார்க் வாண்டஹே கடந்த 2021 ஏப்ரல் 9ஆம் திகதி சர்வதேச விமான நிலைய விண்வெளிநிலையத்தில்ஆய்வுப்பணிமேற்கொள்வதற்காக பூமியில் இருந்து புறப்பட்டார்.

இந்நிலையில் சர்வதேச விண்வெளியில் பணி மேற்கொள்வதற்காக 355 நாள்கள் தங்கியிருந்த அவர், கஜகஸ்தானில் ரஷ்ய விண்வெளி கேப்ஸூல் விண்கலம் மூலம் பூமிக்கு திரும்பினார். இதன் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்தில் அதிக நாள்கள் தங்கியிருந்து பணி செய்த வீரர் என்ற சாதனையை அவர் படைத்தார்.

இதற்கு முன்பு ஸ்காட் கெல்லி விண்வெளியில் தொடர்ந்து 340 நாள்கள் தங்கியிருந்ததே சாதனையாக இருந்தது. மார்க் வாண்டஹே பூமிக்கு திரும்புவதை நாசா நேரடி ஒளிபரப்பு செய்தது. மேலும் அவருடன் 2 ரஷ்ய விண்வெளி வீரர்களும் பூமிக்கு திரும்பினர்.

உக்ரைன் போரால் அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே கடுமையான விரோதம் இருந்த போதிலும் இருநாட்டு வீரர்களும் ஒற்றுமையுடன் பூமி திரும்பியுள்ளனர். பூமிக்குத் திரும்பிய இவர்கள் மூவரும் மீண்டும் தங்களது வழக்கமான பணியை மேற்கொள்ளவுள்ளனர்.

## உள்ளக விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெறலாம்.

–இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

உள்ளக விசாரணை என்று நாங்கள் சொல்லவே இல்லை. ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சுகளில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டை நீங்கள் பார்த்தீர்களாக இருந்தால், குறித்த விடயம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பமாக வேண்டும் என்று தான் சொல்லியிருக்கின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகச் சட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்கே நடத்தப்படுகின்ற விசாரணைகளில் சர்வதேச நிபுணர்களும் பங்குபெறலாம் என்று கூறப்பட்டுள்ளது.

எனவே, அந்த அலுவலகத்தினூடாக நடத்தப்படுகின்ற விசாரணையாக இருக்கலாம் அல்லது வேறு ஒரு பொறிமுறையாக இருக்கலாம்.

இந்த விசாரணை சம்பந்தமாக அவர்களுக்குள்ளேயே இரு நிலைப்பாடு வந்தது.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தினூடாக விசாரணைகளை மேற்கொள்ளலாம் என்று அமைச்சர் பீரிஸ் கூறினார். தென்னாபிரிக்காவின் உதவியோடு நாங்கள் உண்மையைக் கண்டறியும் பொறிமுறையொன்றை உருவாக்குகின்றோம். அதன் மூலம் இதனைச் செய்யலாம் என்று சொன்னார்கள்.

இந்த இரண்டிலும் சர்வதேச ஈடுபாடு இருக்கின்றது. ஆகையால் விசாரணை வேண்டும் என்று நாங்கள் கோரியதற்கு அரசு இணங்கியமையை வைத்துக் கொண்டு உள்ளக விசாரணைக்காக நாங்கள் கோரிக்கை வைத்தோம் என்று சொல்வது எந்தவிதத்திலும் நியாயமான கூற்று அல்ல – என்றார்.

---

## சுடுகாட்டுக்கு சென்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போது சடலத்தைத் தகனம் செய்ய சுடுகாட்டுக்கு கொண்டு சென்ற போது மரம் ஒன்றில் இருந்து கலைந்து வந்த குளவிகள் அங்கு வந்தவர்கலை விரட்டிக் கொட்டியதில் 15 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

இதனையடுத்து குளவிகள் அங்கிருந்து கலைந்து சென்ற பின்னரே சடலம் தகனம் செய்யப்பட்டுள்ளது.

---

## அதிகாரிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எரிபொருளை சேமிப்பதற்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் அறிவித்துள்ளார்.

எங்கள் நாடு முன்னோடியில்லாத சவாலை எதிர்கொண்டுள்ள நேரத்தில், எரிபொருளை சேமிப்பதன் ஒரு படியாக வீட்டில் இருந்தபடியே தங்கள் பணிகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் அலுவலகம் மற்றும் எனது அமைச்சக அதிகாரிகளுக்கு நான் அறிவுறுத்தியுள்ளேன்.

மின்வெட்டுக்கு மத்தியிலும், இந்த அதிகாரிகள் தங்களால் இயன்ற வரையில் தங்கள் பணிகளைச் செய்து வருவதை நான் நன்றியுடன் ஒப்புக்கொள்கிறேன்.

ஓர் அரசாக, இந்த நெருக்கடியின் விளைவாக மக்களின் நிலை குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். இந்தச் சவால்களைக் கடக்க சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றோம்.

பல இடர்பாடுகள் இருந்தபோதிலும், மக்களின் பொறுமையுடனும் மற்றும் ஆதரவுடனும் முப்பது வருட பயங்கரவாதம், கொரோனாத் தொற்று நோய் உட்பட பல சவால்களை வெற்றிக் கொண்ட வரலாற்றை நாம் கொண்டுள்ளோம்.

இந்தச் சவாலையும் அதே வழியில் முறியடிக்க தாய்நாட்டின் பெயரால், அனைத்துப் பிரிவினைகளையும் மறந்து கைகோர்ப்போம் – என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

## நாடு அதலபாதாளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

துறைகளும் வீழ்ச்சியடையக் காரணமாக உள்ளது.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வர்த்தக சபை, கைத்தொழில் சபை, நிர்மாணக் கைத்தொழில், ஏற்றுமதியாளர்கள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களின் பிரதிநிதிகள் குழுவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையேயான சந்திப்பு நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கான காரணங்கள் குறித்து உரிய கவனத்தைச் செலுத்தி அதற்கான தீர்வுகள் காணப்பட வேண்டும்.

கைத்தொழிலைக் கட்டியெழுப்புவதற்கான விசேட வேலைத்திட்டம் வகுக்கப்பட வேண்டும். அது எமது கொள்கையாகும்.

கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து, அதற்குத் தேவையான ஊக்கத்தை அளிக்க வேண்டும். ஏற்றுமதிக்கு முன்னுரிமை வழங்கும் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்க வேண்டும்.

நாட்டுக்குத் தேவையான டொலர்களை ஈட்டவும், வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவும் கைத்தொழில் உதவியாக இருக்கும் – என்றார்.

---

## யாழில் இடையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண மற்றும் பனை, தென்னை வள உற்பத்திக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்ணான்டோ ஆகியோரின் வாகனத் தொடரணியில் வந்த இரு வாகனங்கள், யாழ் நகரில் எரிபொருள் பெறக் காத்துக் கிடந்த வாகன வரிசைக்கு இடையில் புகுந்து எரிபொருள் பெற முயன்றமையினால் பெரும் குழப்பம் ஏற்பட்டது.

இரு அமைச்சர்களும் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு ஐந்து வகனங்களில் வருகை தந்திருந்தனர். திரும்பிச் செல்வதற்காக வாகனத்திற்கு எரிபொருள் பெற யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையத்திற்கு வருகை தந்தனர். அப்போது அந்த எரிபொருள் விற்பனை நிலையத்தில் நூற்றிற்கும் மேற்பட்ட வாகனங்கள் வரிசையில் காத்திருந்தன. அமைச்சர்களின் இரு வாகனங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் டீஸலை வாகன எண்ணெய்த் தாங்கி முழுமையாகவும் நிரப்ப முயற்சிக்கப்பட்டது.

அப்போது எரிபொருளிற்காகக் காத்திருந்த வாகன உரிமையாளர்கள் ’உங்களாளதானேடா நாம் வரிசையில் நிற்கின்றோம். பாவிகளா, இந்த நிலைமையில் எமக்கு 3 ஆயிரம் ரூபாவுக்கு மட்டுமே டீஸல், கொலைகாரருக்கு புல் டாங்க் கேட்குதோ... அப்படி எரிபொருள் அடிக்கக் கூடாது’ எனகடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதன்போது சம்பவத்தை செய்தியாக்கிய ஊடகவியலாளரையும் அமைச்சரின் உதவியாளர் ஒருவர் படம்பிடித்து அச்சுறுத்தினார்.

மக்களுடன் நீண்ட தர்க்கத்தில் ஈடுபட்டு அரை மணி நேரத்தின் பின்பு 11 ஆயிரத்து 200 ரூபாவிற்கு டீஸலைரு வாகனத்திற்கு மட்டும் நிரப்பி அமைச்சரின் வாகனம் வெளியேறியபோது ‘இவங்களால நாங்கள் வாழவும் முடியவில்லை, நிம்மதியாகச் சாகவும் முடியவில்லை, அதேநேரம் எரிபொருளும் இல்லை மின்சாரமும் இல்லாத நேரத்தில் 50 சதத்திற்கு பிரியோசனம் இல்லாமல் டீஸலைக் கரியாக்கி கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வருகின்றனர்’ எனத் தமது ஆதங்கத்தைக் கொட்டித் திட்டித் தீர்த்தனர்.

## கோட்டாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு எதிராகவும், அரசின் தவறான நிர்வாகத்துக்கு எதிராகவும் மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

பொலிஸாரின் தடையைத் தகர்த்தெறிந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னேறிச் சென்றனர்.

இந்நிலையில், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

மக்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் இராணுவத்தினரும், விசேட அதிரடிப் படையினரும் ஈடுபட்டனர்.

இதன்போது கொதிப்படைந்த மக்கள், இராணுவத்தினரை ஏற்றி வந்த பஸ் ஒன்றைத் தீயிட்டுக் கொளுத்தினர். இராணுவத்தின் ஜீப் ஒன்றும் எரிக்கப்பட்டது.

நிலைமையைக் கட்டுப்படுத்த இராணுவத்தினரும், விசேட அதிரடிப் படையினரும் எச்சரிக்கை வேட்டுக்களையும் தீர்த்தனர்.

போராட்டத்தைக் கட்டுக்குள் கொண்டுவர மேலதிகமாகப் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரடி படையினர் அப்பகுதிக்கு வரவழைக்கப்பட்டனர்.

இதேவேளை, பொலிஸார் மற்றும் படையினரின் தாக்குதல்களில் காயமடைந்த ஐவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன. அவர்களுள் ஊடகவியலாளர் ஒருவரும் அடங்குகின்றார்.

மேலும் நால்வர் களுபோவில ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

இலங்கையை ஆட்சி செய்த முன்னாள் ஜனாதிபதிகள் இப்படியான மக்களின் எதிர்ப்பை தமது வீடுகளுக்கு அருகில் சந்தித்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம் –

கொழும்பு வடக்கு, தெற்கு, மத்தி,, நுகேகொடை ஆகிய பகுதிகளில் நேற்று நள்ளிரவு 12 மணிமுதல் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதனைப் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லத்துக்கு வெளியே நேற்று மாலை முதல் ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலை காரணமாகவே கொழும்பு வடக்கு, தெற்கு, கொழும்பு மத்திய மற்றும் நுகேகொட பொலிஸ் பிரிவுகளில் மறு அறிவித்தல் வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.










---

## களனியிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்ப்புத் தெரிவித்தும், ஜனாதிபதியைப் பதவி துறக்குமாறு கோரியும் நேற்றிரவு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

களனி – தலுகம பகுதியில் கண்டி வீதியின் குறுக்கே பலகைகளையும் ரயர்களையும் போட்டுக் கொழுத்தி மக்கள் வீதியின் இரு மருங்கிலும் நின்று தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதனால் கொழும்பு – கண்டி வீதியூடான போக்குவரத்து களனி – தலுகம பகுதியில் தடைப்பட்டுள்ளது.



# தனது இயலாமையை சர்வதேசத்துக்கு காட்டிய நாட்டின் ஜனாதிபதி கோட்டா!

## இம்ரான் எம்.பி. சாட்டை



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொருளாதார ரீதியில் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாத தனது இயலாமையைச் சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தியுள்ளார் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மக்ரூப் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

உலகளவில் ஏற்பட்ட கொவிட் தொற்றுக் காரணமாக நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது போனதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொழும்பில் நடைபெற்ற பிம்ஸ்டெக் மாநாட்டில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்த மாநாட்டுக்காக உரையாற்றிய பங்களாதேஷ் பிரதமர் பேகம் ஷேக் ஹஸீனா கொவிட் தொற்றுக்கு மத்தியிலும் தமது நாடு 6.3 வீதம் பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையும் பங்களாதேஷும் தெற்காசிய நாடுகள். இரண்டு நாடுகளுக்கும் கொவிட் பொதுப்பிரச்சினை. இருந்தும் அந்த நாடு பொருளாதாரத்தில் முன்னேறியுள்ளது. நமது பொருளாதாரம் அதலபாதாளத்தை நோக்கிப் போயுள்ளது.

இந்தக் கொவிட் சவாலுக்கு மத்தியில் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வது தொடர்பாகத் தனது முழு ஆற்றலையும் பங்களாதேஷ் பயன்படுத்தியது. அது வெற்றி கண்டது. நமது நாட்டில் நடந்ததென்ன? ஜனாதிபதி போலி விளம்பரங்கள் மூலம் மக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்று ஆட்சிக்கு வந்தார்.

எனினும் அவரால் கொவிட் சவாலை வெற்றி கொண்டு பொருளாதாரத்தை முன்னேற்ற முடியவில்லை. தேர்தலில் போலி விளம்பரம் செய்து மக்களைக் கவரும் ஆற்றல் பெற்ற அவருக்கு நாட்டின் பொருளாதாரம் பற்றித் தெரியாது.

இதனால் நாட்டின் பொருளாதாரம் குட்டிச் சுவராகி விட்டது. எரிபொருளுக்கு வரிசை. எரிவாயுவுக்கு வரிசை, பால்மா இல்லை, சகல பொருள்களினதும் விலை பல மடங்கு அதிகரிப்பு, தினமும் 9 மணித்தியாலங்களுக்கு மாத்திரமே மின்சாரம் வழங்குவோம் என்று வெட்கமில்லாமல் அறிவித்துச் செயற்படுத்தும் சூழ்நிலை, மக்கள் தொடர்ந்து பட்டினியை நோக்கிச் செல்லும் பரிதாபம்.

பொருளாதாரம் தெரியாதோரிடம் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்ததன் விளைவுகள் இவை.

ஆடத்தெரியாதவன் மேடையைக் குறை சொல்வதைப் போல பொருளாதாரம் தெரியாத ஜனாதிபதி அதற்கு கொவிட்டைக் காரணம் காட்டுகின்றார்.

இதனால் அவர் தோல்வியடைந்ததோடு மட்டுமல்லாது நாட்டு மக்களையும் பொருளாதாரத்தில் தோல்வியடையச் செய்துள்ளார். யார் யாருக்கு, என்ன ஆற்றல் உள்ளது என்பதைப் பார்க்காமல் எல்லாவற்றையும் அவர் அரசியல் ரீதியாகப் பார்த்தமையே இதற்குக் காரணம். நமது நாட்டில் பொருளாதாரம் தெரியாத நிதியமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் சொல்வதற்குத் தலையசைக்கும் அதிகாரிகள் சிலர் அந்த அமைச்சின் கீழ் உள்ளனர். நாட்டின் பொருளாதார முன்னேற்றம் தொடர்பாக அக்கறையற்ற மத்திய வங்கி ஆளுநர் நியமிக்கப்பட்டுள்ளார். மத்திய வங்கி ஆளுநருக்குத் தெரிந்த ஒரேயொரு பொருளாதார அறிவு தட்டுப்பாடு ஏற்பட்டால் காசு அச்சடிக்கும் பொறி முறை மட்டும் தான்.

இந்த நிலையில் நாடு எப்படி முன்னேறும் என்று கேட்க விரும்புகின்றேன். எனவே, தனது இயலாமையைப் பகிரங்கமாக ஒத்துக்கொண்ட ஜனாதிபதி, தன்னால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாவிட்டால் விட்டு ஒதுங்கிச் செல்வது அவர் இந்த நாட்டுக்குச் செய்யும் பேருதவியாகும். இதன் மூலம் வரலாறு அவரைப் பேசும்.

இந்த நிலையில் சரியானவர்களை இனங்காணும் அறிவு குறைந்த எம்மில் சிலர் நாடாளுமன்றத்தில் அவர்கள் சமர்ப்பிக்கும் எல்லாவற்றுக்கும் கையை உயர்த்தி இந்த நாடு பொருளாதாரத்தில் குட்டிச் சுவராகக் காரணமாக அமைந்து விட்டார்கள்.

அவர்களும் இந்த நாட்டின் பொருளாதாரப் பின்னடைவுக்குக் காரணமாக அமைந்தவர்கள் என்று வரலாறு பேசும் என்பதை நினைக்கும் போது கவலையாக உள்ளது. -இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# நெருக்கடிக்கு விரைவாக தீர்வுகாணாவிட்டால் மக்களின் எதிர்ப்பு பாரிய பூகம்பமாக வெடிக்கும்!

## முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னகோன் எச்சரிக்கை



நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாணுமாறு நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் மக்கள் மேற்கொண்டுவரும் எதிர்ப்பு போராட்டங்கள் பாரிய பூகம்பமாக மாறும் அபாயம் இருக்கின்றது. அவ்வாறான நிலை ஏற்பட்டால் அரசாங்கத்துக்கு கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படும். அதனால் அனைத்து தரப்பினரையும் இணைத்துக்கொண்டு பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாட்டில் ஏற்பட்டிருக்கும் எரிபொருள், காஸ் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்புக் காரணமாக மக்கள் மிகவும் விரக்தியுடனே காலத்தைக் கடத்தி வருகின்றனர்.

நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் நீண்ட விரிசையில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இந்த பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசாங்கத்திடம் எந்த வேலைத்திட்டமும் இல்லை. மக்களுக்குத் தேவையான தொகையில் 10 வீதத்தைக்கூட வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அந்த நிலை ஏற்படும் என நாங்கள் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் இருந்து தெரிவித்து வருகின்றோம். இந்த நெருக்கடி நிலைமைக்கு டொலர் பிரச்சினை மாத்திரம் காரணமல்ல. அரசாங்கத்தின் பிழையான தீர்மானங்களே பிரதான காரணமாகும்.

டொலர் இல்லாமல் இதுவரைக்கும் அத்தியாவசிய உணவுப்பொருள்கள் அடங்கிய சுமார் ஆயிரத்து 300 கொள்களன்கள் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

இதனை இறக்குமதி செய்த வியாபாரிகள் இதற்காக தாமதத்துக்கான நஷ்டஈடு செலுத்தி வருகின்றனர். அதனால் வியாபாரிகள் தங்களுக்கு ஏற்படும் நட்டத்தைப் பொருள்களுக்கு விலையை அதிகரித்து மீட்டிக் கொள்கின்றனர்.

அத்துடன் அரசாங்கம் உரம் தொடர்பில் எடுத்த பிழையான தீர்மானம் காரணமாக விவசாயம் வீழ்ச்சியடைந்துள்ளது. விவசாயத்துக்குத் தேவையான உரத்தைப் பெற்றுக்கொள்ள வருடத்துக்கு டொலர் மில்லியனே தேவைப்படுகின்றது.

ஆனால் அரசாங்கம் சீனாவில் இருந்து கழிவு உரத்தைக் கொண்டுவரத் தீர்மானித்துள்ளதால் ஒட்டுமொத்த விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று மின்சார பிரச்சினைக்கு அரசாங்கம் உடனடியாக தீர்காண வேண்டும். டீசல் கிடைக்காவிட்டால் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் 10 மணி நேர மின் துண்டிப்பு மேலும் பல மணி நேர்ததுக்கு அதிகரிக்கலாம் என மின்சாரசபை அறிவித்துள்ளது.

எனவே நாடு எதிர்கொண்டுள்ள இந்தப் பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வு காணுமாறு இன்று மக்கள் சுயமாக பல பிரதேசங்களிலும் வீதிக்கிறங்கி போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் போராட்டம் மிகவிரைவில் பாரிய பூகம்பமாக வெடிக்கும் அபாயம் இருக்கின்றது.

அதனால் தற்போதைய நிலைமையில் எதிர்க்கட்சிகள் அரசியல் லாபம் தேடாமல், பிரச்சினைக்குத் தீர்வுகாண அனைத்து தரப்பினரும் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். – என்றார்.

# வவுனியா பாடசாலையருகில் குப்பைகளினால் துர்நாற்றம்!

## மக்கள் விசனம்



வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம், கற்குழி ஆகிய பகுதிகளில் நீண்ட நாள்களாக வீட்டுக் குப்பைகள் அகற்றப்படவில்லையெனவும், இதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகவும் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பாடசாலைக்கு மாணவர்களை அழைத்துச் செல்லும்போது துர்நாற்றம் வீசுகின்றது. இதனை நீண்ட நாள்களாக அகற்றுவதற்கு எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

குப்பைகளை தரம் பிரித்து பைகளில் கட்டிவைக்குமாறு நகரசபை ஊழியர்களால் அறிவுறுத்தல் வழங்கப்பட்ட நிலையிலும் அதனை அப்பகுதி மக்கள் பின்பற்றவில்லை.

இந்நிலையில், தரம் பிரித்து வழங்கும் குப்பைகளை எடுக்குமாறு நகரசபை அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக நகரசபை ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

கற்குழி நகரசபை உறுப்பினரிடம் இது தொடர்பாக வினவியபோது -

சபைக்கு இது தொடர்பாக முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அகற்றுவதற்கு தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

நகரசபை ஊழியர்கள் பற்றாக்குறை, கண்காணிப்பாளரின் மேற்பார்வையில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளால் நகரில் இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.04.2022இல் வெளியிடப்பெற்றது.